

[illegible]

திரு

अवतार ஸு

5089.

श्रीः

श्रीमते नारायणाय नमः ॥
श्रीमते शठकोपाय नमः ॥
श्रीमते विष्णुचित्ताय नमः ॥
श्रीमते रामानुजाय नमः ॥
श्रीमत्कृष्णसूरये नमः ॥
श्रीमद्वरवरमुनये नमः ॥
भक्तानुग्राहकं पुण्यं प्रतिपक्षनिरासकम् ।
श्रीपादाब्जेन्द्रनक्षत्रं श्रीवैष्णवसुदर्शनम् ॥

விபவ-ஸு

ஆடி-மீ

சோதி-41

ஒளி - 8

# ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

488

மாதப் பத்திரிகை

ஸ்தாபகர் : ஸ்ரீ. உ. வே. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி.

ஆசிரியர்: "வித்யா விஶாரத" "திவ்யார்த்த ரத்னாகர"

ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் (ஸுதர்சனர்), அட்வகேட்,

[தலைவர்: பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ஸபை, கோயில் உபயவேதாந்த ப்ரசார ஸபை. உபதலைவர்: ஸ்ரீராமாநுஜ மிஷன், கோயில் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷண ஸபை, சென்னை எம்பெருமானார் தரிசன ஸம்ரக்ஷண ஸமாஜம்.]

3B. புத்தூர் அக்ரஹாரம். திருச்சிராப்பள்ளி-17.

உதவி ஆசிரியர்: "உத்தம குண ஶீல:"

ஸ்ரீ. ராம ஐயங்கார், அட்வகேட்,

[கோயில் தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷண ஸபையின் நிர்வாக அங்கத்தினர்]

ஸ்ரீ. ஸ. ஸ்ரீ. கி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரின் குடும்ப தர்ம சொத்துக்களின் ஆதரவில் இது வெளிவருகிறது.

தனிப்பிரதி விலை தபால் செலவுடன் ரூ. 2-00

ஆயுள் சந்தா ரூ. 125. 26-7-1988 வருடச் சந்தா ரூ. 20

## விஷயஸூசிகை


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் — செய்திகள் | 1—8 |
| 2. | ஸுதர்சனர் பதில் (107—110) | 9—12 |
| 3. | ஈசோபநிஷத்வ்யாக்யானம் (9—16) | 13—20 |
| 4. | ஆசார்ய வைபவ மஞ்ஜரி (305—312) | 21—28 |
| 5. | கீதாவ்யாக்யானம் (193—200) | 29—36 |
| 6. | ப்ரபந்நாம்ருத தர்ப்பணம் (233—240) | 37—44 |
| 7. | திருச்சந்தவிருத்தம் (57—64) | 45—52 |
| 8. | சாரீரககாரிகாவளி (29—32) | 53—56 |
| 9. | செய்திகள் | 57—58 |


## சந்தா செலுத்தியவர்கள்

| | | | ரூ. |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ | வி. கண்ண ராமாநுஜதாஸர், வந்தவாசி | 20 |
| 2 | ,, | என். கோவிந்தராஜன், இளங்காடு | 18 |
| 3 | ,, | ஆர். வேணுகோபால், சென்னை-17 | 20 |
| 4 | ,, | ஆர். ரகுநாதன், மயிலாடுதுறை | 20 |
| 5 | ,, | ஜி. ஸ்ரீநிவாஸன், திருப்பதி | 20 |
| 6 | ,, | எஸ். ஸ்ரீநாத், சென்னை-15 (ஆ. ச.) | 125 |
| 7 | ,, | கே. எஸ். ஸ்ரீநிவாஸாசாரி, பொந்தவாக்கம் | 20 |
| 8 | ,, | எ. வி. ராமகிருஷ்ணன், அத்திப்பாளையம் (ஆ. ச.) | 50 |
| 9 | ,, | கே, திருமலை, சென்னை-61 | 20 |
| 10 | ,, | துக்காராம் ராமாநுஜதாஸர், கீழக்கல் பூண்டி | 20 |
| 11 | ,, | தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சை | 20 |
| 12 | ,, | புலவர் பரந்தாமன், சென்னை-73 (ஆ ச) | 25 |
| 13 | ,, | பி. ராமசந்திரன், பெங்களூர்-85 | 20 |
| 14 | ,, | வி. ஆர். எதிராஜ ராமானுஜதாஸர், ஆற்காடு | 20 |
| 15 | ,, | டி. என். ஆராவமுதன், பெரம்பலூர் | 20 |
| 16 | ,, | ஏ. எஸ். ஜி. சர்மன், சென்னை-116 | 20 |
| 17 | ,, | வி. எஸ். ஸ்ரீநிவாஸ ரங்கன், ஸ்ரீரங்கம் (ஆ. ச.) | 125 |
| 18 | ,, | வி. வேங்கடவரதன், சென்னை-53, (ஆ.ச.) | 63 |
| 19 | ,, | ஆர். சாரங்கன், புதுடில்லி-67 | 20 |
| 20 | ,, | ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார், பெங்களூர்-53 | 20 |
| 21 | ,, | கே. ஜி. ஆண்டாளம்மாள், ஸ்ரீரங்கம் | 20 |
| 22 | ,, | எ. அழகர்சாமி, மதுரை-1 | 20 |
| 23 | ,, | செல்வி எஸ். தனலட்சுமி, கோவை-1 | 20 |

குறிப்பு:—ராப்பர் 4-ல் விலாஸத்துக்கு முன் கொடுக்கப்பட்டிருக்கும் எண் சந்தா எந்த இதழுடன் முடிவடைகிறது என்பதைக் காட்டும். அதைப்பார்த்து சந்தாபாக்கியை விரைவில் செலுத்தும் படி கேட்டுக்கொள்கிறோம், இல்லையெனில் பத்திரிகையை நிறுத்த நேரிடும், விலாஸமாறுதலையும் உடனுக்குடன் தெரிவிக்கவேணும். யாருக்காவது 2 பத்திரிகைகள் கிடைக்கப் பெற்றால் ஒரு பத்திரிகையைத் திருப்பி அனுப்பி இது குறித்து எமக்குக் கடிதம் எழுத வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.—ஆசிரியர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

சோதி - 41 ] [ ஒளி - 8

# ஸுதர்சன ஞானபுத்திரர்கள்

[ஸுதர்சனர்]

நாளுக்குநாள் நலிந்துவரும் வைணவம் வளர்ச்சியடைய என்ன செய்ய வேண்டும் என்பதுபற்றிப் பலவருடங்களாகப் பல கருத்தரங்குகள் நடந்துவிட்டன. அவற்றில் பல பெரியவர்கள் பல ஆலோசனைகள் சொல்லியிருக்கின்றனர். இவ்வாலோசனைகளின்படி ஏதாவது செயல்திட்டம் இதுவரை நடைபெற்றதா என்று பார்த்தால், குறிப்பிடத்தக்கதாக எதுவும் காணவில்லை. இதற்கு முக்கிய காரணம் வைணவத்தை வளர்ப்பதற்கு ஸ்ரீ வைஷ்ணவர்களிடையே எழுச்சி மிக்க இளைஞர்கள் பலர் முன்வராததேயாகும்.

ஸ்ரீ வைஷ்ணவக் குடும்பங்களில் இன்றுள்ள இளைஞர்களில் பலர் 'வைணவம்' என்றால் என்ன என்றே தெரியாதவர்களாயிருக்கிறார்கள், வயிற்றுப்பாட்டுக்காகப் பலரை அண்டி வேலைசெய்ய வேண்டியிருக்கையாலே, பெரும்பாலான இளைஞர்கள் வைணவக் கோட்பாடுகளைக் கைவிட்டுவிட்டனர். திருநாமம் அணிந்துகொள்ளவே விருப்பமில்லாமல் பலர் இருக்கிறார்கள். புறந்தொழாமைக் கொள்கை பெரும்பாலானவர்களால் கைவிடப்பட்டு வருகிறது. அந்தண வைணவ இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் ஸந்த்யாவந்தனம் முதலான நித்யகர்மங்களையே அனுஷ்டிப்பதில்லை. ஆஹாரநியமம் அடியோடு போய்விட்டது. இந்நிலையிலும் வைணவக் கோட்பாடுகளில் உறுதியுள்ள ஸ்ரீ வைஷ்ணவ இளைஞர்கள் ஆங்காங்கு இருப்பதை நாம்

அறிவோம். இவர்கள் தம்மையொத்த இளைஞர்களைச் சிறிது சிறிதாகத் திருத்தி வைணவக் கோட்பாடுகளைக் கைக் கொள்ளும்படி செய்ய வேண்டும். அடுத்த தலைமுறையில் வைணவம் நிலைத்து வாழ்வதற்கு இது ஒன்றே வழியாகும்.

நமது "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்ஶனம்" நாற்பது வருடங் களுக்கு மேலாக நடந்து வருகிறது. ஸுதர்சனம் தோன்றிய பிறகு பிறந்த நூற்றுக்கணக்கான வைணவ இளைஞர்கள் ஸுதர்சனத்தில் வெளிவந்த நூல்களால் ஜ்ஞானமபெற்று, தக்கவர்களிடம் கேட்டு அதை வளர்த்துக்கொண்டு வருவதை நாம் தமிழ்நாடெங்கும் காண்கிறோம். நமது வெளியீடுகளில் 'சங்ககாலத் தமிழர் சமயம்' போன்ற ஆராய்ச்சி நூல்களையும், ப்ரபந்நாம்ருதம்போன்ற குருபரம் பரை நூல்களையும், திவ்யப்ரபந்த வ்யாக்யான விளக்க நூல்களையும், ஸுதர்சனர் பதில்களையும், ப்ரஸ்தாநத்ரய விளக்கங்களையும் இந்த இளைஞர்களைக்கொண்டு தமிழ்கூறும் நல்லுலகமெங்கும் பரவச்செய்யவேண்டும் என்று விரும்பு கிறோம், அதற்காக "ஸுதர்சன ஞான புத்திரர்கள்" என்னும் தலைப்பில் இவர்களில் ஒரு சிலரை மாதந்தோறும் ஸுதர்சனத்தின்மூலம் அறிமுகப்படுத்த விரும்புகிறோம். நமக்குத் தெரிந்த இத்தகைய இளைஞர்களை அறிமுகப்படுத்து வதுமட்டும் போதாது. அதனால் இன்று வைணவத்திற்குப் பலவகையில் பணிபுரிந்துவரும் பெரியவர்களும் தாங்கள் அறிந்த இத்தகைய இளைஞர்களைப்பற்றி ஸுதர்சனத்தில் அறிமுகப்படுத்துவதற்காக நமக்கு எழுதவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இவ்விளைஞர்களிடம் நாம் எதிர்பார்க்கும் தகுதிக ளாவன:—(1) பஞ்சஸம்ஸ்காரம் பெற்றவர்களாகவும், மற் றோர் தெய்வமெண்ணாதவர்களாகவும், எப்போதும் திருமண் காப்பு அணிபவர்களாகவும் இருக்கவேண்டும். (2) அந்தண இளைஞர்களானால் ஸந்த்யாவந்தனம் முதலான நித்ய நைமித் திக கர்மங்களை அனுஷ்டிப்பவர்களாயிருக்கவேண்டும். (3) வைணவர்கள் அடியோடு விலக்கவேண்டிய வெங்காயம் முருங்கைக்காய் முதலான தாமஸமான ஆஹாரங்களை உட்கொள்ளாதவர்களாயிருக்கவேண்டும். தங்கள் வீடுகளி

லாவது எம்பெருமானுக்கு அமுதுசெய்விக்கப்பட்ட ப்ரஸா தங்களையே உண்பவர்களாயிருக்கவேண்டும். (4) தங்களை யொத்த இளைஞர்களை இயன்றவரையில் வைஷ்ணவர்க ளாகத் திருத்தவேண்டும் என்ற உறுதிபூண்டவர்களா யிருக்கவேண்டும். இத்தகைய தகுதியுள்ளவர்களை அவர் களைப்பற்றிய விவரங்களோடு நமக்குத் தெரிவிக்கும்படி வைணவப் பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறோம். இவ்வறி முகம் இளைஞர்கள் வைணவத்திற்குத் தொண்டுசெய்ய வேண்டும் என்ற நோக்கோடு செய்யப்படுகிறதேயொழிய அவர்களை விளம்பரப்படுத்தவேண்டும் எனும் நோக்கோடு செய்யப்படவில்லை. ஆகையால் அறிமுகப்படுத்தப்படுபவரின் புகைப்படத்தை எவரும் அனுப்ப வேண்டாம். இளைஞர் முற்கூறிய தகுதிகளும் தொண்டு மனப்பான்மையுமுடைய வர் என்று அறிமுகப்படுத்துகிறவர் தெரிவித்தால் போது மானது. முதன்முதலில் நமது ஸுதர்சனத்துக்குப் பலவரு டங்களாகப் பலமுறைகளில் தொண்டுபுரிந்துவரும் இளைஞர் ஒருவரை அறிமுகப்படுத்துகிறோம்.

## ஸுதர்சன ஞானபுத்திரர் — 1.

### ஸௌம்யநாராயணாசாரியர்.

1954வது வருடம் நவம்பர் மாதம் 3ந்தேதி (ஜய வருஷம் ஐப்பசி மாதம் 18ந்தேதி) திருவோண நன்னாளில் திருவெள்ளறையில் எங்களாழ்வான் வம்சத்தவர்களாகத் தீர்த்தமரியாதை பெற்றுவரும் இரண்டு திருமாளிகைகளில் மேலத்திருமாளிகையைச் சேர்ந்த ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸா சாரிய ஸ்வாமியின் ஜ்யேஷ்ட₂ குமாரராகப் பிறந்தவர் இவர். ஆங்கிலக்கல்வியில் B.A. பட்டம் பெற்றவர். அருளிச்செயல் நாலாயிரமும் ஸ்தோத்ரபாடங்களும் நன்கு பயின்று ஸ்ரீரங்கம் கோயிலில் நாலாயிர அத்யாபகராகச் சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்கிறார். லௌகிகமான உத்யோகத்துக்குச் செல் வதை விரும்பாமல் சென்ற பத்து வருடங்களாகத் தொண்டு மனப்பான்மையோடு நமது ஸுதர்சனம் காரியாலயத்தில் பிழை திருத்துவது முதலான பல முறைகளில் பணி புரிந்து வருகிறார். இளம்வயதிலிருந்தே ஸுதர்சனம் வெளியீடு

களையும், ஸ்ரீகாஞ்சீ மஹாவித்வான் ஸ்வாமியின் வெளியீடு களையும் படித்து அறிவு வளரப்பெற்றவரிவர். நம்மால் ஸுதர்சன ஞானபுத்திரர்களுக்கு வேண்டியவையாகக் குறிப்பிடப்பெற்ற எல்லாத்தகுதிகளையும் முழுமையாகப்பெற்றவர். பரமஸாத்விக ஸ்வபாவமுடையவர். சினிமா, தொலைக்காட்சி, கதைப் பத்திரிகைகள் புத்தகங்கள் முதலான வீண்பொழுது போக்குகளில் ஈடுபாடு அற்றவர். ஸ்ரீரங்கம் ஸ்ரீ உ. வே. நாஸிம்ஹாசார்ய ஸ்வாமி முதலான பல வித்வான்களிடம் ஸம்ப்ரதாயார்த்தங்களைக் கேட்டுவருபவர். நம்மிடம் பத்து வருடங்களாகப் பத்திரிகை நடத்துவதிலும், க்ரந்தங்களைப் பிழையற வெளியிடுவதிலும் பயிற்சி பெற்றுவரும் இவர் பல மலர்களில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். நமக்குப் பிறகு நமது பத்திரிகைக்கும், வெளியீடுகளுக்கும் ஆசிரியராயிருந்து நடத்திவர முழுத்தகுதி பெற்ற இவர் நல்ல பதத்தால் மனைவாழ்ந்து வையம்மன்னி வீற்றிருக்க அருள் புரியவேண்டுமென்று அணியார் பொழில்சூழ் அரங்கநகரப்பனைப் ப்ரார்த்திக்கின்றோம்.

## நாலாயிர திவ்யப்ரபந்தம்

உயர்ந்த காகிதத்தில் டெமிசைஸில் கைக்கடக்கமான ஒரே புத்தகமாக பைண்டு செய்து நம்மால் வெளியிடப்பெற்றிருக்கும் இதன் விலை ரூ. 37-00. இதன் விலையை முன்பணமாக அனுப்பினால் ரூ. 6-00 தபாற் கூலிக்கு V. P. மூலம் புத்தகம் அனுப்பப்பெறும். முன்பணம் அனுப்பாமல் V. P. மூலம் பெற மொத்தம் ரூ. 45-00 ஆகிவிடும். ஆகையால் ஒரு பிரதிக்கு ரூ. 37 முதல் ரூ. 40க்குள் முன்பணம் அனுப்புவதே நல்லது. ஐந்து பிரதிக்குமேலே தேவையானால் ரூ. 37 வீதம் முன்பணம் அனுப்பி லாரி மூலம் பெறுவது நல்லது. மலிவு விலையாகையால் கமிஷன் (தள்ளுபடி) கிடையாது. ரிஜிஸ்தர் தபால் மூலம் பெற ரூ. 46-00 அனுப்பவேண்டும். சாதா தபாலிலோ ரிகார்டட் டெலிவரி தபால் மூலமோ அனுப்புவது இயலாது. M.O. அல்லது D.D. அனுப்பவேண்டிய விலாசம்:—

S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்
3B, புத்தூர் அக்ரஹாரம்,
திருச்சி-620 017

## பாரதீய பூர்வசிக ஸ்ரீ வைஷ்ணவ ஸபையின் மணிவிழா (12-வது) மகாநாடு

ஸ்ரீரங்கம் மேலச்சித்திரை வீதி பாரதீய பூர்வசிக ஸ்ரீ வைஷ்ணவ ஸபையின் 12வது மகாநாடு (மணிவிழா மகாநாடு) 7-8-88 ஞாயிறன்று காலை 8 மணி முதல் நடைபெறவிருக்கிறது. (கொத்தட்டை) பண்டாரி ஸ்ரீ உ. வே. சௌரிராஜய்யங்கார் ஸ்வாமி அக்ராஸனம் வகிக்கிறார். முதல்நாள் மாலையிலும் மகாநாடன்று மாலையிலும் வித்வான்களின் உபந்யாஸங்கள் நடைபெறும். நமது திவ்ய ப்ரபந்தப்பதிப்பு வெளியிடப்பெறும். அங்கு கிடைக்கும்.

## பாண்டியில் மகாநாடு

பாண்டிச்சேரி வரதராஜப் பெருமாள் ஸந்நிதியில் 30, 31-7-88 இருதினங்கள் ஸ்ரீ ராமாநுஜ நாவலர் ஸ்வாமிகள் மன்றத்தின் 10வது ஆண்டு ஸ்ரீ வைஷ்ணவ மகாநாடு பேராசிரியர் Dr. T. வைத்தமாநிதி அவர்களின் தலைமையில் நூல் வெளியீடு, ஸ்ரீவைஷ்ணவ அறிஞர்களுக்குப் பாராட்டு, சொற்பொழிவுகள் ஆகியவற்றுடன் நடைபெறவிருக்கிறது. பலர் கலந்து கொண்டு உரையாற்றுகின்றனர். 30-7-88 மாலை 6 மணியளவில் ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம் ஆசிரியர் ஸ்ரீ உ, வே. எஸ். கிருஷ்ண ஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி 'வைஷ்ணவர் கடமை' பற்றியும், 31-7-88 அன்று மாலை 6 மணியளவில் வேளுக்குடி ஸ்ரீ உ. வே. கே. வரதாசார்ய ஸ்வாமி 'ஆண்டாள் திருக்கல்யாணம்' பற்றியும் உபந்யஸிக்கவிருக்கின்றனர். மகாநாட்டில் நமது திவ்ய ப்ரபந்தப் பதிப்பு கிடைக்கும்.

## மதுரை, அகில பாரத ஸ்ரீ வைஷ்ணவ மஹாசபை

1. பெரியாழ்வார் திருநக்ஷத்திரம் 25—6—88 ஞாயிறுமாலை ஸ்ரீ கூடலழகர் திருக்கோயில் தெருவிலுள்ள ஸ்ரீ ராமாநுஜகூடத்தில் கொண்டாடப்பட்டது. சோளஸிம்ஹபுரம் கோயில் கந்தாடை சண்டமாருதம் ஸ்ரீ உ. வே. பெரியப்பங்கார் ஸ்வாமி ஸபைக்கு எழுந்தருளி மங்களாசாஸனம் செய்து ''அழகிய சிங்கரும் பெரியாழ்வாரும்'' என்ற விஷயத்தை விரிவாக உபந்யஸித்தருளினார். பேராசிரியர் டாக்டர் இரா. அரங்கராஜன் ஸ்வாமி தொட்டயாசார்யர் திருமாளிகையின் பிரபாவத்தை விளக்கியுரைத்தார்.

2. 3-7-88 ஞாயிற்றுக்கிழமை ஸபை உறுப்பினர்கள் மதுரை ஸ்ரீ கூடலழகர் கோவில் ஸ்ரீ மதுரவல்லித்தாயார் ஸந்நிதியில் திருக் கோயில் துப்புரவுத் திருப்பணியை மேற்கொண்டனர். ஸ்ரீ ஹரி மாமாவின் ஹரிநாம கோஷங்களோடு அன்பர்கள் மெய்வருத்திக் கை செய்தும், கடைத்தலை சீய்க்கப்பெற்றும் கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்தனர். பேராசிரியர் டாக்டர் இரா. அரங்கராஜன் "திருக்கோயில் தொண்டு" பற்றி விளக்கினர்.

3. சனிக்கிழமைதோறும் நடைபெற்றுவரும் திவ்யப்பிரபந்த சேவையில் 16—7—88 சனியன்று இயற்பா சாற்றுமுறை வைபவம் ஸ்ரீராமாநுஜ கூடத்தில் ஸ்ரீ உ. வே. A. R. ஸ்ரீநிவாஸ ராகவய்யங்கார் ஸ்வாமி (ஸ்ரீ ஹரிமாமா, துவரிமான்) தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் டாக்டர் இரா. அரங்கராஜன் 'திருவெழுகூற் றிருக்கை' பற்றி உபந்யஸித்தார்.

### கரியமாணிக்கத்தில் லக்ஷார்ச்சனை.

திருச்சிஜில்லா கரியமாணிக்கத்தில் வரதராஜப்பெருமாள் ஸன்னிதியில் திருவெள்ளறை பாஞ்சராத்ர அர்ச்சகஸ்வாமிகளைக் கொண்டு விபவ ஆடி 2ந் தேதி முதல் 6ந் தேதி வரையில் சிறப்பாக லக்ஷார்ச்சனை நடைபெற்றது. ஆழ்வார் திருநகரி, தென்திருப்பேரை, ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம், திருவாலிதிருநகரி, காஞ்சீபுரம், ஸ்ரீபெரும்பூதூர், திருவல்லிக்கேணி முதலான திவ்ய தேசங்களிலிருந்து முப்பது ஸ்வாமிகளுக்கு மேல் எழுந்தருளியிருந்து லக்ஷார்ச்சனைக்கு அங்கமாக நடைபெற்ற உபயவேத ஸஹஸ்ர நாம பாராயண கோஷ்டிகளில் அந்வயித்தனர். பூர்த்திதினத்தன்று முற்பகலில் ஸ்ரீ உ. வே. வித்வான்களான ஸுதர்சனம் ஆசிரியர் ஸ்வாமி, திருநாங்கூர் P. B. K. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி, ஸ்ரீரங்கம் சிங்கமய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீ காஞ்சீ ராஜஹம்ஸன் ஸ்வாமி, திரு வெள்ளறை ஸௌம்யநாராயணன் ஸ்வாமி ஆகியவர்கள் உபன் யஸித்தனர். எல்லா நாட்களிலும் மிகச்சிறப்பாகத் ததீயாராதனம் நடைபெற்றது. இவ்விழாவுக்குப் பேருதவிபுரிந்த கரியமாணிக்கம் கண்ணனும், ராதாகிருஷ்ணனும், முன் னின்று நடத்திய ஸ்ரீநிவாஸ வாத்தியார் ஸ்வாமியும் மிகவும் பாராட்டுக்கு உரியவர்கள். சுக்ல வருஷம் தைமாதத்தில் ஸந்நிதி ஜீர்ணோத்தாரண ஸம்ப்ரோக்ஷணம் நடைபெறவுள்ளது,

## பகவத்விஷய மஹோத்ஸவம்

திருவல்லிக்கேணி கோயில் திருவாய்மொழி மண்டபத்தில் 1988 ஆகஸ்ட் 14 முதல் 23ந் தேதி வரையில் தினந்தோறும் காலை மணி 7 முதல் 8-30 வரை ஒவ்வொரு ஸ்வாமியைக் கொண்டு திருவாய்மொழியின் ஒவ்வொரு பத்தின் ஸாரப்பொருள் உபந்யஸிக்கப்பெறும். பருகிக் களிக்கலாம்.

## மதுரையில் திவ்யப்ரபந்த விழா.

மதுரை ஐக்யவைஷ்ணவ ஸபையின் ஆதரவில் ஆவணி 3 முதல் 6ந்தேதி (ஆகஸ்ட்19—22) வரை கூடலழகர் ஸன்னிதியில் திவ்யப்ரபந்த விழா நடைபெறுகிறது. பலஅறிஞர்கள் உரையாற்றுகிறார்கள். ஆகஸ்ட் 21 ஞாயிறு காலையில் ஸுதர்சனம் ஆசிரியர் 'உண்டோ சடகோபர்க்கு ஒப்பு' என்னும் தலைப்பில் உரையாற்றுகிறார். கலந்துகொண்டு அனைவரும் பயன் பெறுக.

## திருநகரி ஸம்ப்ரோக்ஷணம்.

திருவாலிதிருநகரி திருமங்கையாழ்வார் கல்யாணரங்கநாதர் ஸன்னிதி ஸம்ப்ரோக்ஷணம் ஆடி 31 முதல் ஆவணி 3 (ஆகஸ்ட் 15—19) வரை நடைபெறுகிறது. அனைவரும் பங்குபெற்றுப் பயன் பெறலாம்.

## சதாபிஷேக மஹோத்ஸவம்

திருநாங்கூர் திவ்ய தேசங்களில் ஒன்றான அண்ணன்கோவில் என்னும் திருவெள்ளக்குளத்தில் முதல்தீர்த்த மரியாதையுள்ளவரும், நல்ல நிர்வாஹகரும், பரமஸாத்விகருமான பரமார்த்தரத்னம் ஸ்ரீ உ. வே. ப்ர. ப. ஸ்ரீ. திருவேங்கடாசார்ய ஸ்வாமிக்கு 8-8-88 திங்கட்கிழமை சதாபிஷேக மஹோத்ஸவம் சிறப்பாகநடக்கிறது. அதற்கங்கமாக 4-8-88 தொடங்கி உபயவேதக்ரந்த பாராயணமும் ஸ்வாமி திருமாளிகையில் நடைபெறுகிறது. ஸ்வாமி அரோகத்ருடகாத்ரராய்ப் பல்லாண்டு எழுந்தருளியிருந்து பெருமாள் கைங்கர்யங்களை நன்கு செய்துவர வேணுமாய் அணியார்பொழில்சூழ் அரங்கநகரப்பனைப் ப்ரார்த்திக்கிறோம்.

## ஓர் அறிவிப்பு.

நமது ஸ்ரீநிவாஸம் அச்சகத்தில் சிலகாலமாகத் தாற்காலிகப் பகுதி நேர ஊழியராக வேலை செய்துவந்த (ஸ்ரீரங்கம்) K. பிச்சுமணி அய்யங்கார் வேலையிலிருந்து நின்றுவிட்டார். நமது பத்திரிகை, அல்லது அச்சக விஷயமாக எவரும் அவரோடு தொடர்பு கொள்ளவேண்டாம்.

# செய்திகள்

1. திருநாங்கூர் வைகுந்த விண்ணகரம் ப்ரதிவாதிபயங்கரம் திருமாளிகை சிஷ்யசபாவின் பத்தாவது ஆண்டுவிழா சென்னை திருவல்லிக்கேணியில் டிபி-கோயில் முதல் சந்து அந்தங்கி ஸ்வாமி திருமாளிகை திருமண மண்டபத்தில் விமரிசையாக 2-8-88 செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது. ஆண்டுவிழா மலர் வெளியிடப்பெறும்.

2. பெங்களூர் ராஜாஜீ நகர் முதல் ப்ளாக் 15வது தெரு 151 நிர். திருமாளிகையில் ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா டிரஸ்டின் சார்பில் 11-8-88ல் ஆடிப்புஷ்யத்தன்று ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாவின் வருஷத் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் சிறப்பாக நடைபெறுகிறது. அன்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு பயன் பெறலாம்,

3. சேலம் ஸ்ரீ வைஷ்ணவ ஸத்ஸம்ப்ரதாய ஸபையின் ஆதரவில் வாசவி மஹாலில் 16—7—88 முதல் 16—8—88 வரை பால பண்டிதமணி ஸ்ரீ உ. வே. திருமலாசார்ய ஸ்வாமி தினமும் காலை மணி 7-15 முதல் 8-45 வரை திருவெழு கூற்றிருக்கை, இரு திருமடல்கள், திருக்குறுந்தாண்டகம் ஆகிய 4 திவ்யப்ரபந்தங்கள் பற்றியும், மாலை மணி 6-00 முதல் 8-15 வரை ஸ்ரீ ராமாயணம் ஸுந்தரகாண்டம், ஸ்ரீ பாகவத தசமஸ்கந்தம் ஆகியவை பற்றியும் உபந்யாஸம் நிகழ்த்துகிறார். அன்பர்கள் கேட்டுப் பயனடையலாம்.

4. கடுக்கலூர் திருமாலடியார் மன்றத்தின் சார்பில் மோக்ஷகுளத்தில் 2-7-88 அன்று எஸ். ரகுவீர பட்டாசார்ய ஸ்வாமியால் ஸ்ரீபாகவத மாதாந்தர இலவச உரைத்தொடர் தொடங்கப்பெற்றது, ஷை சபையின் சார்பில் கல்பாக்கத்தில் 10-7-88 அன்று இராமாயணப் பயிற்சித் தேர்வு நடைபெற்றது. ஆரணி திருமாலடியார் குழாம் சார்பில் 5, 6-7-88 இரு தேதிகளில் "தூதுபோனவன் ஏற்றமும், அதனால் ஏற்பட்ட மாற்றமும்' பற்றி ஸ்வாமி உபந்யஸித்தார்.

5. கோவை காரமடை ஸ்ரீ வைஷ்ணவ ப்ரசார ஸபையின் 33 வது கூட்டம் சாலையூர் ஆண்டாளம்மாள் க்ருஹத்தில் 8-7-88 அன்று நடைபெற்றது. தோப்பு ஸ்வாமி, பரகால ராமாநுஜம், வரதராமாநுஜம், இளையாழ்வார் ராமாநுஜம், கிருஷ்ண ராமாநுஜம் ஆகியோர் உபந்யஸித்தனர்.

கே. வி. வரதன், சென்னை — மற்றும் பலர்.

57. (i) எம்பெருமான் அவனுடைய அடியார்களுக்குக் கடுமையான துன்பங்களை அளித்து அளவுக்கு அதிகமாகச் சோதிக்கிறனே. 'முன்புசெய்த தீவினையின் பயனை இப்போது அனுபவித்தே தீரவேண்டும்' என்றால் அவன் அபார கருணை யுடையவன், வாத்ஸல்யாதி குணங்களையுடையவன் என்று பூர்வர்கள் அருளியது பொய்யா? பிராட்டிமார்கள் புருஷகாரம்செய்து அவன் அடியார்கள் குற்றங்களைக் காணுதிருக்கவும் அவற்றையே போக்யமாகக்கொள்ளவும் செய்வார்கள் என்று அருளியது பொய்யா? (ii) முற்பிறப்பில் செய்த தீவினைக்கு இப்பிறப்பில் தண்டனை ஏன்? இந்தத் தண்டனை சரீரத்துக்கா? மனத்துக்கா? ஆத்மாவுக்கா? தெளிவுபடுத்தப் பிரார்த்திக்கிறேன்.

(i) ஜீவனுடைய சரீர யாத்ரையைப் பொறுத்தவரையில் அது மிகுதியாகக் கர்மம் காரணமாகவே நடக்கிறது. ஜீவனுடைய ஆத்ம யாத்ரையைப் பொறுத்தவரையில் அது எம்பெருமானுடைய கிருபை காரணமாகவே நடக்கிறது. இது இந்த லீலா விபூதியிலுள்ள எல்லாச் சேதனர்களுக்கும் பொதுவாயுள்ள நியதி. எம்பெருமான் அபார கருணையுடையவன், வாத்ஸல்யம் முதலான குணங்களையுடையவன் என்று சாஸ்திரங்களும் பூர்வர்களும் அருளுவது இந்த ஆத்மயாத்திரை விஷயத்திலேயேயாகும். பெரியபிராட்டியார் புருஷகாரம் செய்வதற்காக எப்போதும் திருமார்பில் எழுந்தருளியிருப்பதும் சேதனனை எம்பெருமானோடு சேர்த்து வைப்பதற்கேயாகும். தேஹயாத்ரையிலும் சேதனர்கள் அனுஷ்டிக்கும் உபாயங்களுக்கு அனுகுணமாகக் கருணை முதலான குணங்களைக் காட்டுவது உண்டாயினும், பூர்வகர்மங்களோடு முரண்படாத விஷயங்களிலேயே அது செயல்படும். பஞ்சபாண்டவர்களுக்கும்

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 103 | 5 | அமைந்துள்ளது | முடிகின்றது |
| ,, | 7 | முடிகின்றது. | ஸ்ரீ ஸூக்திகளின் |

த்ரௌபதிக்கும் அவர்களுடைய தேஹயாத்ரையில் அளவற்ற கருணையைச்செய்தான் கண்ணன், அவர்கள் விரும்பிய ராஜ்ய ப்ராப்தி சத்ரு நிரஸனம் முதலானவற்றை அவர்களின் சரணு கதிக்குப் பலமாகவும், த்ரௌபதியின் மானஸம்ரக்ஷணத்தை அவள் செய்த திருநாம ஸங்கீர்த்தனத்துக்குப் பலமாகவும் அளித்தான். ஆனால் அவர்களும் கர்மானுகுணமாக வன வாஸம் முதலான கணக்கற்ற துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. பிள்ளைகளையும் உற்றார் உறவினர்களையும் கர்மானுகுணமாக இழக்கவேண்டியிருந்தது "மற்றவர்களுக்குக் கர்மானுகுணமாகப் பலன் அளித்தாலும் தன் அடியார்கள் விஷயத்தில் பக்ஷபாதத்தோடு பாபானுகுணமான பலனை அளிக்காமலிருக்கக் கூடாதோ?" எனில்; அடியார்கள் விஷயத்தில் பாபங்களை அனுபவிக்கச் செய்யாமல் புண்ய பலனையே அளித்துவந்தால் அவ்வடியார்களுக்கு இந்த லீலா விபூதியிலேயே இருந்துவிடலாம் என்று தோன்றிவிடும். இவ் வுலகப் பயன்களில் வைராக்யம் விளையாது. இது பிறவிகளைக் கொடுத்து அவர்களது ஆத்மாவுக்கு அனர்த்தத்தையே விளைத்து விடும். அதனாலேயே தனக்கு மிக இனிய அடியார்களான ப்ரபன்னர்களுக்கு இப்பிறவியில் அனுபவிக்கவேண்டிய ப்ராரப்தகர்மங்கள் தவிர மற்ற கர்மங்கள் அனைத்தையும் போக்கி, இந்த சரீரத்தில் அனுபவிக்கவேண்டிய ப்ராரப்த கர்மங்களை மட்டும் அனுபவித்தே தீரவேண்டும் என்று விதித்திருக்கிறான் பரம காருணிகனான எம்பெருமான்.

(ii) சேதனன் செய்யும் நல்வினை தீவினைகளுக்குப் பயனை அவன் ஏதாவது ஒரு பிறப்பில் அனுபவித்தே தீரவேண்டும் என் னும் நியதி நியாயமானதேயாகும். அவற்றில் மிகக்கொடியவை யான பாகவதாபசாரம் அஸஹ்யாபசாரம் முதலான பாபங்களுக் கும், எம்பெருமானுக்கும் பாகவதர்களுக்கும் மிகவும் கைங்கர் யம் செய்வதாகிற மிகச்சிறந்த புண்யங்களுக்கும் அப்பிறவியி லேயே பலனை அனுபவித்துவிடுவார்கள் என்பது சாஸ்த்ரநியதி. மற்ற புண்ய பாப பலனை ஏதாவது ஒருபிறவியில் அனுபவிக்க வேண்டும் என்பதே நியதி. தீவினை செய்த ஜீவன் அவனே யாகையாலே 'முற்பிறவியில் செய்த தீவினைக்கு இப்பிறப்பில் தண்டனை ஏன?" என்ற கேள்விக்கு இடமேயில்லை, சரீரத்

தோடும் மனத்தோடும் கூடிய ஜீவனே நல்வினை தீவினைகளைச் செய்தவனுகையாலே சரீர மனங்களோடு கூடிய அவனே அவற்றின் ப₂லனை அனுபவிக்கிருன்.

S. வேங்கடம், சமயபுரம். (58, 59 கேள்விகள்)

*58. ஒரு ஜீவன் இன்ன சமயத்தில் மோக்ஷமடைவான் என்னும் நிச்சயம் உண்டா? ஸர்வஜ்ஞனை எம்பெருமான் அந்த சமயத்தை அறிவானு?*

எம்பெருமான் தனக்கு வைஷம்ய நைர்க்₄ருண்யங்கள் (பக்ஷபாதமும் கருணையின்மையும்) விளையாமைக்காக, ப்ரத₂ம ப்ரவ்ருத்தியில் ஜீவனுக்கு அளித்திருக்கும் ஸ்வாதந்த்ர்யத்திஞல் உண்டாகும் 'ப்ரதிபத்தி' எனப்படும் நினைவுகளையும், அந்த நினைவுகளுக்கு அனுகு₃ணமாக அவன் கைக்கொள்ளும் ஸாத₄னங்களையும் எதிர்பார்த்தே அவ்வப்பலன்களை அளிக்கிருன். இக்காரணத்தால் ஜீவனுக்கு மோக்ஷத்திற்கு உறுப்பான நினைவும் ஸாத₄ன பரிக்₃ரஹமும் எப்போது விளைகிறதோ அப்போதே அவன் மோக்ஷமடையும் ஸமயம் நிஶ்சிதமாகிறது. பக்தியாகிற உபாயத்தைக் கைக்கொண்டவனுக்கு அந்த உபாஸனம் நிறைவடைந்தவுடன் ப்ராரப்₃த₄கர்மம் முடிவடையும் சரீரத்தின் இறுதியில் மோக்ஷம் கொடுப்பதாக ஸங்கல்பித்து விடுகிருன் எம்பெருமான். ப்ரபன்னனுக்கு அந்த சரீரத்தின் இறுதியிலேயே மோக்ஷம் கொடுப்பதாக ஸங்கல்பித்து விடுகிருன். இவை சாஸ்திர ஸித்₃த₄மான நிர்ணயங்கள். இதிலிருந்து ப₄க்தனுகவோ, ப்ரபன்னனுகவோ ஆகாதவரையில் இன்ன சமயத்தில் ஜீவன் மோக்ஷமடைகிருன் என்பது நிச்சயமில்லாத விஷயம் என விளங்குகிறது. இவர்கள் விஷயத்தில் நிச்சயமில்லாமையாலே எம்பெருமானும் இவர்கள் மோக்ஷமடையும் சமயத்தை அறியமாட்டான். நிச்சயமில்லாத விஷயத்தில் அறியாமலிருப்பது ஸர்வஜ்ஞத்வத்துக்குக் குறையாகாது, ப₄க்த ப்ரபன்னர்கள் விஷயத்தில் நிச்சயம் ஏற்பட்டுவிட்டபடியால் அதை எம்பெருமான் அறிவான்.

*59, ஒரு ஜீவன் மரணமடையும் ஸமயம் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டதா? அல்லவா? நிச்சயிக்கப்பட்டதென்ருல் அதை நீட்டிக்கமுடியமா? ஜாதகம் முதலானவற்றைக்கொண்டு அந்த ஸமயத்தை நிர்ணயிகக முடியுமா?*

இந்த சரீரத்திற்குரிய ப்ராரப்,த,கர்மத்தை அனுபவித்து முடித்தவுடன் மரணம் ஏற்படுகிறது என்பது சாஸ்திரஸித்தம். ஆகையால் இது எம்பெருமானால் நிச்சயிக்கப்பட்ட விஷயம்; நீட்டிக்கவும் முடியாது. இதையே பொதுஜனங்கள் மனிதன் பிறக்கும்போதே பிரமன் ஆயுளைத் தலையில் எழுதிவிடுவதாகக் கூறுகிறார்கள். ஆயுள் முடியும் ஸமயம் அந்த ஜீவன், அவனுடைய மனைவி மக்கள், பெற்றோர் முதலான பலருடைய கர்ம வினைகளும் கூடிவரும்போது ஏற்படுகிறதாகையாலே அவனுடைய ஜாதகத்தை மாத்திரம் பார்த்து இதை அறுதியிடுவது இயலாது. இப்படி ஆயுளை நிச்சயிக்க முடியாமலிருப்பதாலேயே மனிதன் வாழும்வரையில் ஓரளவுக்கு நிம்மதியுடன் வாழ்கிறான்.

R, பத்மநாபய்யங்கார், மேலக்கொட்டையூர், கும்பகோணம்.

60. விசுவஹிந்துபரிஷத் (43, ராமாநுஜம் தெரு, தி.நகர் சென்னை-600 017) வெளியிட்ட "ஆலயம் காக்க ஓர் அறப்போர்" என்னும் புத்தகத்தைத் தங்கள் பார்வைக்கு அனுப்பியிருக்கிறேன். இதுபற்றித் தங்கள் கருத்தை வெளியிடவேண்டுகிறேன்.

இப்புத்தகத்தில் ஆலயங்களின் நிர்வாகவரலாறும், இன்று அவற்றின் நிர்வாகம் மதநம்பிக்கையற்ற அரசின் பிடியில் சிக்கி அவலமான நிலையிலிருப்பதும், அதற்காகப் பரிஷத் நடத்தும் போராட்டங்களின் முன்னேற்றமும் விவரிக்கப்பட்டுள்ளன. அரசின் பிடியிலிருந்து சைவ வைணவ ஆலயங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் நமக்குச் சிறிதும் கருத்து வேற்றுமையில்லை. அதற்காகப் பரிஷத் நடத்தும் போராட்டங்கள் மிகவும் பாராட்டத்தக்கவை. ஆனால் "சைவவைணவ ஆலயங்கள் ஒரே ஹிந்து வாரிய நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட வேண்டும்' என்னும் பரிஷத்தின் கோரிக்கையை நாம் ஏற்பதற்கில்லை. "சைவாலயங்கள் சைவ அறவோர் வாரியத்தின் நிர்வாஹத்தின் கீழும், வைணவாலயங்கள் வைணவ அறவோர் வாரியத்தின் நிர்வாஹத்தின் கீழும் கொண்டுவரப்பட வேண்டும்'' என்பதே நமது திடமான கருத்து. வைணவ மதத் தலைவர்களின் கருத்தும் இதுவேயாகும். ஸுதர்சனம் 484, 485 486, தலையங்கங்களில் இதை நாம் விளக்கியிருக்கிறோம். அத்தலையங்கங்கள் ஸுதர்சனர் பதில் பத்தாவது சதகத்துக்கு அநுபந்தமாக இணைக்கப்பட்டுள்ளன,

இங்கு பின்வருமாறு ஓராக்ஷேபம் எழக்கூடும்:-ப்₃ரஹ்மவித்₃யை எனப்படும் ப₄க்தியோக₃ம் நம்மை உடையவனான எம்பெருமானிடம் நாம் ஒப்பற்ற அன்பு செலுத்துவதேயாகும். இவ்வன்பு ஸ்வயம்ப்ரயோஜனமானது—(தானே மிக இனிய பயனாயிருப்பது). அப்படியிருக்க, பு₄ர்த்ருபோ₄கத்தை விலைக்குறுப்பாக்குவதுபோலே (கணவனிடம் தான் அடையும் இன்பத்திற்கு மனைவி கூலிகேட்பதுபோலே) இதை உபாயமாக்கி இதைக்கொண்டு மோக்ஷமாகிற பேற்றைப்பெறுவது உசிதமோ? உபனிஷத்து இதை உபாயமாக விதிக்கலாமோ? என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாத₄ானம் பின்வருமாறு:—அநாதி₃காலமாகத் தன் பேறுகளின் பொருட்டுத் தான் முயன்றுவந்த சேதனனுக்கு அநாதி₃யான ஸம்ஸாரத்துன்பம் நீங்கப்பெற்று நித்யமான ப₄க₃வத₃நுப₄வமாகிற பேரின்பத்தைப்பெறுவது ஒப்பற்ற பேருகையாலே, அதற்காகத்தான் முயலவேண்டும் என்று தோன்றுமாகையாலே, அவர்களுக்காக ப₄க்தியை உபனிஷத்து உபாயமாக விதி₄க்கிறது. ஆனால் அப்படி விதி₄க்கும்போது மூன்று வகையான த்யாக₃ மனப்பான்மையோடுகூட உபாஸநாங்க₃மான கர்மத்தை அநுஷ்டி₂க்கவேண்டும் என்றும் விதி₄க்கிறது. "இதனுடைய ப₂லம் எனக்கில்லை" என்னும் ப₂லத்யாக₃த்தோடும், "இந்தக் கர்மம் என்னுடையதல்ல" என்னும் மமதாத்யாக₃த்தோடும், "ஸர்வேஸ்வரனே கர்த்தாவாகையாலே நான் கர்த்தாவல்ல" என்னும் கர்த்ருத்வத்யாக₃த்தோடும் ப்ராரப்₃த₄கர்மம் முடியும்வரையில் உபாஸனத்தையும், அதற்கு அங்க₃மான கர்மத்தையும் அநுஷ்டி₂க்கும்போது "உண்மையில் ஸர்வேஸ்வரன் உபாயமேயொழியத் தான் அநுஷ்டி₂க்கும் எதுவும் உபாயமல்ல; மோக்ஷமடைவதும் அவனுடைய உகப்புக்கேயொழியத் தன் உகப்புக்கல்ல" என்று விளங்கிவிடும் என்னும் காரணத்தாலேயே வேத₃புருஷன் இவ்வண்ணமாக த்ரிவித₄பரித்யாக₃ங்களை விதி₄த்திருக்கிறான் என்று கண்டுகொள்வது. இப்படி உண்மை உணரப்பெற்றவன் ப்ரபன்னனாகி, ப₄க்தியை ஸ்வயம்ப்ரயோஜநமாகக்கொண்டு எம்பெருமானுடைய நிர்ஹேதுககிருபையாலே ப₄க₃வத₃நுப₄வ கைங்கர்யங்களைப் பெறுகிறான். வேத₃புருஷனின் உட்கருத்து இதுவாகையாலே குறையில்லை.

இனி, ஸ்ரீ வேதா₃ந்த தே₃ஶிகரும், கூரநாராயணஜீயரும் அருளிய பொருளின் ஸாரம் பின்வருமாறு;— "ஈஶ்வரனுன நாராயணனுலே சேதநாசேதனங்களடங்கிய இவ்வுலகம் வியாபிக்கப்பட்டுள்ளது; அல்லது தாங்கப்படுகிறது; எல்லாவுலகங்களிலும் மாறுபாடடையும் போ₄க்₃யங்களான அசேதனப்பொருள்களும், போ₄க்தாக்களான சேதனப் பொருள்களும் யாவை சில உண்டோ, அவையனைத்தும் இப்படி எம்பெருமானுக்குப் பரதந்த்ரமானவை. இவ்வண்ணமாக நீ உனக்கு போ₄க்₃யமானது என மயங்கும் பொருளின் தோ₃ஷமிகுதியை உணர்ந்து, அதில் பற்றற்றவனுய், ஶாஸ்த்ரத்தில் நிஷேதி₄க்கப்படாததாய், நீ அனுஷ்டிக்கும் உபாயத்துக்கும் உனது தே₃ஹத₄ாரணத்திற்கும் மாத்திரம் உறுப்பாயிருப்பதான பொருளை அநுப₄விப்பாயாக; (அல்லது சொல்லப்போகும் ஆராவமுதான எம்பெருமானை உபாயமான ப₄க்தியினுலே அநுப₄விப்பாயாக;) வேறொருவனுடைய பொருளை ஆசைப்படாதே, மற்ற பொருள்களில் வைராக்₃யமுடையவனுய், பரமாத்மாவிடமே ஈடுபடுவாயாக என்றபடி."

இந்த மந்திரத்தின் ஶங்கரபா₄ஷ்யத்தின் கருத்து பின்வருமாறு உள்ளது:—"அனைத்தையும் நியமிக்கும் பரமாத்மா 'ஈட்' எனப்படுகிருன்; அவனே ஜீவாத்மாவாயிருந்து எல்லா ஜந்துக்களுக்கும் ஆத்மாவாய் அனைத்தையும் நியமிக்கிருன். ஆத்மாவாகிற இயல்பான ரூபமான ஈஶனுன அவனுல் இவ்வுலகனைத்தும் மறைக்கத்தக்கது. ஸத்யரூபமான பரமாத்மாவாகிற தனது ஆத்மாவால் 'நானே இவையெல்லாம்' என்று சராசரமாயிருக்கும் பொய்யான உலகனைத்தும் மறைக்கத்தக்கது. சந்த₃னம் அகில் முதலானவற்றை நீர்விட்டு அரைக்கும்போது முதலில் நீரின் தொடர்பால் செயற்கையாக உண்டாகும் து₃ர்க்க₃ந்த₄ம் மேலும் தேய்க்கத்தேய்க்க, சந்த₃னம் முதலானவற்றின் இயற்கை நறுமணத்தால் எப்படி மறைக்கப்பட்டு இல்லை செய்யப்படுகிறதோ, அப்படியே ஆத்மாவில் ஏறிடப்பெற்றுள்ள நாம ரூப கர்மங்களாகிற விகாரங்கள் உண்மையான ஆத்மாவை அநுஸந்திப்பதால் கைவிடப்படவேண்டும். இவ்விதமான பா₄வனையோடு கூடியவனுக்கு, புத்ரேஷணை, தா₃ரேஷணை, வித்தேஷணை (பணம் மனைவி மக்களிடம் விருப்பம்) எனப்படும் மூன்று ஈஷணைகளைக் கைவிடுவதாகிற கர்மஸந்யாஸத்தில் அதி₄காரமுண்டேயொழியக் கர்மங்களில் அதி₄காரமில்லை. இப்படி ஈஷணுத்ரயத்தையும் விடுவதன் மூலம் ஆத்மாவை ரக்ஷிப்பாயாக. பிறர்பொருளையோ உன்

பொருளையோ விரும்பாதே. அல்லது எல்லா த₄னமும் பொய்யான தாகையால் அதை விரும்பாதே என்றுமாம்." இது சங்கரரின் பா₄ஷ்யத்தின் கருத்து.

இக்கருத்துக்கும் மந்திரங்களின் பத₃ங்களுக்கும் பின்வருமாறு பல பொருந்தாமைகள் உள்ளன:—(1) மறைக்கும் பொருள் எதுவும் மறைக்கப்படுவதைப் புலப்படாமல் செய்கிறதேயொழிய பொய்ப்பொருளாக ஆக்குவதில்லை. சந்தன த்₃ருஷ்டாந்தத்திலும் தீயமணம் நறுமணத்தால் மறைக்கப்படுகிறதேயொழிய இல்லை செய்யப்படுவதில்லை. ஆகையால் 'உலகம் பொய்' என்று பொருள் கொள்வது தவறு. ஆகையால், "வாஸ்யம்" என்பதற்கு 'வஸ்திரம் போல் த₄ரிக்கப்படும் பரதந்திரப் பொருள்' என்றோ, 'வியாபித்து த₄ரிக்கப்படும் பரதந்திரப் பொருள்' என்றோ பொருள்கொள்வதே பொருத்தமானது. (2) 'அனைத்தையும் நியமிப்பவன்' என்று 'ஈட்' ஶப்₃த₃த்திற்குப் பொருள் எழுதிவிட்டு, அவனே ஜீவாத்மா என்று எழுதுவது நியமிக்கப்படுபவனாகவும், பல துன்பங்களை அனுப₄விப் பவனாகவும் ஜீவன் ப்ரத்யக்ஷமாகக் காணப்படுவதற்கும், ஜீவ பரர்களை வெவ்வேறாக முழங்கும் ஆயிரக்கணக்கான வேதவாக்யங் களுக்கும் பொருந்தாது. (3) "பு₄ஞ்ஜீதா₂:" என்றதற்கு "(ஆத் மாவை) ரக்ஷிக்கவேண்டும்" என்று பொருளுரைத்தது இலக் கணத்திற்கு முரணானது. "பு₄ஜோऽநவநே" [அஷ்டாத்₄யாயீ 1-3-66] என்னும் பாணிநிஸூத்ரம் 'ரக்ஷணம்' தவிர வேறு அர்த் த₂த்தில் வழங்கும்போதே 'பு₄ஜி' தா₄துவிற்கு ஆத்மநேபத₃ம் வரும் என்று விதி₄க்கையால் இங்கு ஆத்மநேபத₃மான "பு₄ஞ் ஜீதா₂:" என்னும் சொல்லுக்கு "ரக்ஷிப்பாயாக" என்று பொரு ளுரைத்தது இலக்கணவிதிக்கு முரண்பட்டதாகும். உலகிலும், ரக்ஷணம் தவிர வேறு பொருளில் வழங்கும்போது "ஓத₃நம் பு₄ங்க்தே" [உணவை உண்கிறான்] என்று ஆத்மநேபத₃ம் வருவதையும், ரக்ஷணப்பொருளில் வழங்கும்போது "ப்ருதி₂வீம் பு₄நக்தி" [(அரசன்) பூ₄மியை ரக்ஷிக்கிறான்] என்று பரஸ்மை பத₃ம் வருவதையும் நியமமாகக் காண்கிறோம். ஆகையால், "பு₄ஞ்ஜீதா₂:" என்னும் ஆத்மநேபத₃ப்ரயோக₃த்திற்கு ஶங்கரர் ரக்ஷணப் பொருளைக்கொண்டது இலக்கண வழக்கிற்கும், உலக வழக்கிற்கும் முரணானது. (4) மேலும், ஶங்கரர் 'ஈஶா' என்னும் பத₃த்திற்கு விஶேஷணமாக 'ஸத்ய ரூபேண ஸ்வஜ்ஞாதேந' என் னும் பத₃ங்களை வருவித்துக்கொண்டதும், "பு₄ஞ்ஜீதா₂:" என்னும்

பத₃த்திற்கு விஷயமாக "ஆத்மாநம்" என்னும் பத₃த்தை வருவித்துக்கொண்டதும், "ஸர்வமித₃ம்" என்னும் பத₃ங்களுக்கு விஶேஷணமாக "அந்ருதம்" [பொய்யான] என்னும் பத₃த்தை வருவித்துக்கொண்டதும் தமது மதத்தை எப்படியாவது மந்திரத்தில் புகுத்திவிட வேண்டும் என்னும் அவரது அபி₄நிவேஶத்தையே காட்டுகிறது. (5) மேலும், 'ஈஶா' எனப்படும் நியந்தாவான ஸத்யமான ஆத்மா அறியப்பட்டால், த்₃வைத ப்ரபஞ்சம் நிராகரிக்கப்படும் என்று ஶங்கரர் உரையிட்டதும் பொருந்தாது. 'ஈட்' ஶப்₃த₃த்தாலே 'நியமிப்பவன்' என்று சொன்னபோதே 'எதை நியமிப்பவன்' என்னும் கேள்வி எழுமாகையால், "இத₃ம் ஸர்வம்" என்னும் பத₃ங்கள் ஸத்யமான உலகத்தை நியமிப்பவன் என்று காட்டுவதன்மூலம் உலகமும் உண்மையானது என்றே தெரிவிக்கும். ஆகையால் இந்த மந்திரத்தால் உலகம் பொய்யென்று நிராகரிக்கப்பட இடமேயில்லை. 'ஈஶா' என்று நியமிப்பவனாகச் சொல்லப்பட்டவனை நியமிக்கப்படும் ஆத்மாவாகக் கொள்வதற்கும் இடமில்லை என்பதை முன்பே சொன்னோம். இங்கு ஆத்மஸ்வரூபத்தைப் பொருளாகக் கருதியிருந்தால் வேத₃புருஷன் 'ஈஶா' என்று பத₃ப்ரயோக₃ம் செய்திருக்கமாட்டான் என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். (6) "தேந த்யக்தேந" என்றதற்கு ஸர்வகர்மஸந்யாஸத்தைப் பொருளாகக்கொண்டால், மறுபடியும் "மா க்₃ருத₄: கஸ்யஸ்வித் த₄நம்" என்று பணத்தை ஆசைப்படுவதாகிற் ஒரு குறிப்பிட்ட செயலைத் தள்ளுவது புநருக்தியாகும். 'ஈஷணாத்ரயத்தையும் விட்டுவிடு' என்ற பிறகு 'பணத்தில் ஆசையை விடு' என்று மறுபடி விதி₄க்க இடமே இல்லையே! வித்தேஷணையாகிற பணத்தில் ஆசை ஈஷணாத்ரயத்தில் ஒன்றல்லவோ. (7) மேலும், 'கர்மஸந்யாஸத்தை இங்கு விதி₄க்கிறது' என்று ஶங்கரர்கொள்வது, "குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேத் ஶதம் ஸமா:" என்று அடுத்த மந்திரத்தில் "கர்மங்களைச் செய்துகொண்டே இவ்வுலகில் நூருண்டுகள் வாழ விரும்பவேண்டும்" என்று முழங்கியிருப்பதோடு முரண்படும். 'அடுத்த மந்திரம் இவ்வுலகப் பலன்களை விரும்பும் பு₃பு₄க்ஷுவைப்பற்றியது' என்று ப₄ாஷ்யமிடுவதும் ஒட்டாது; பு₃பு₄க்ஷுவுக்குரிய கர்மங்கள் அனைத்தையும் கூறிவிட்டு, இறுதியில் ஞானகாண்ட₃மான உபனிஷத்தில் 'கர்மங்களைப்பற்றற்றுச் செய்யவேண்டும்' என்று முமுக்ஷு எவ்வண்ணம் கர்மங்களை அநுஷ்டி₂க்கவேண்டும் என்பதை வர்ணிக்குமிடத்தில், மறுபடியும் பு₃பு₄க்ஷுக்களைப்பற்றிப் பேசுவதாகக் கூறுவது சிறிதும் பொருந்தாதன்றோ. "இக்காரணங்க

னால் இந்த மந்திரத்திற்கு ஶங்கரரின் வியாக்கியானம் தம் கொள்கைக்குத் தக்கவாறு வேத ஶப்தங்களை நலிந்து பொருள் கொள்வதாயிருக்கையால், தலைக்குத் தக்கபடி தலைப்பாகையை அமைத்துக்கொள்ளாமல், தலைப்பாகைக்குத் தக்கபடி தலையை வெட்டிக்கொள்வதைப்போல் உள்ளது" என்பது ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமியின் ஸாரமான நிர்ணயம்.

ஶ்ருதப்ரகாஶிகாகாரர் ப்₃ரஹ்மஸூத்ர (3-4-14) ஸ்ரீபா₄ஷ்யத்தின் வ்யாக்₂யானத்தில், "ஈஶா வாஸ்யம்" என்னும் பாட₂த்தைக்கொண்டு, "ஈட்ஶப்₃த₃: த்ருதீயாந்த: ஈஶா | தேந வாஸ்யம்" என்று விவரித்த பொருளே ஸ்ரீரங்க₃ாசார்ய ஸ்வாமியால் விளக்கப்பட்டது. ஶ்ருதப்ரகாஶிகாகாரரே அப்₄யுபக₃ம்யவாத₃ ரீதியில் "ஈஶாவாஸ்யம்" என்று ஸமஸ்தபத₃மாகவும் பாடங்கொண்டார். இரண்டு பாட₂த்திலும் தேறுவது "உலகம் ஈஶ்வரனுக்கு அத்யந்த பரதந்த்ரமானது' என்பதே என்னும் கருத்தை "ஈஶ்வர பரதந்த்ரமித்யர்த்த₂:" என்று விவரித்துக் காட்டினர். இதுவே இம்மந்திரத்தின் பரமஸாரமான அர்த்த₂மாகும்.

## உபயவேத₃ாந்த ஒற்றுமை-1

ஈஶாவாஸ்ய உபனிஷத்தின் முதல் மந்திரத்தில் முற்பாதியில் ஸர்வேஶ்வரனாலே உலகனைத்தும் வஸ்திரம்போல் தனக்குச் சிறப்பு உண்டாம்படி த₄ரிக்கப்படுகிறது என்றும், அவ்வுலகனைத்தும் வியாபித்து தரிக்கப்படுவதாயிருக்கையால் ஶரீரமாயிருப்பதென்றும் ஓதப்பட்டது, இவ்விஷயங்கள் தமிழ் வேதத்திலும் "கண்ணி எனதுயிர் காதல் கனகச்சோதி முடி முதலா எண்ணில் பல் கலன்களும் ஏலும் ஆடையும் அஃதே" [திருவாய் 4-5-5] முதலான விடங்களிலும், "உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்" [திருவாய் 1-1-7] "ஆக்கையுள்ளும் ஆவியுள்ளும் அல்லபுறத்தினுள்ளும் நீக்கமின்றி எங்கும் நின்றாய்" [திருவாய் 4-7-6] முதலானவிடங்களிலும் முழங்கப்பட்டுள்ளன. மந்திரத்தின் மூன்றாவது பாத₃த்தில் செயல்களில் மூன்று வகையான த்யாக₃ மனப்பான்மை விதிக்கப்பட்டது. நம்மாழ்வாரும் "எனதாவிதந்தொழிந்தேன்" என்றவுடன்,

'எனதாவீ யார்? யான் ஆர்? தந்த நீ கொண்டாக்கினையே'' [திருவாய் 2-3-4] என்று இந்த மனப்பான்மையைக் காட்டினார். ''செய்கின்ற கிதியெல்லாம் யானே என்னும்'' [திருவாய் 5-6-4] என்னும் பாட்டிலும் கீ₃தாஸாரமான இவ்வர்த்த₂த்தைக் காட்டினார். மந்திரத்தின் நாலாம் பாதத்தில் ''பிறர் பொருளை ஆசைப்படாதே'' என்று ஓதப்பட்டது. ''வாடினேன் வாடி'' [பெரிய திரு 1-1] ''வாணிலா முறுவல்'' [பெரிய திரு 1-6] முதலான திருமொழிகளிலும், ''சூதனாய்க்கள்வனாகி'' [திருமாலை 16] முதலான பாடல்களிலும் ஆழ்வார்களும் இவ்வர்த்த₂த்தைக் காட்டினர். ''வீடுமின் முற்றவும'' [திருவாய் 1-2] முதலான விடங்களிலும் இம்மந்திரத்தின் ஸாரார்த்த₂ம் நம்மாழ்வாரால் அநுஸந்திக்கப்பட்டது. 1

कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेच्छतँ समाः ।

एवं त्वयि नान्यथेतोऽस्ति न कर्म लिप्यते नरे ॥ २ ॥

2. குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேச்ச₂தம் ஸமா: |
ஏவம் த்வயி நாந்யதே₂தோऽஸ்தி ந கர்ம லிப்யதே நரே ||

**ஏவம்** — முன்மந்திரத்தில் கூறியபடி மூன்றுவகையான த்யாக₃மனப்பான்மைகளோடு, [**முமுக்ஷோ: ப₄வாந்**— மோக்ஷமடைய விரும்பும் நீ]. **இஹ**—ப்₃ரஹ்ம வித்₃யையை அனுஷ்டி₂க்கும் இப்பிறப்பில், **கர்மாணி** — (தத்தம் வர்ணாஶ்ரமங்களுக்கு அநுகு₃ணமாக இதுவரையில் கர்மகாண்ட₃த்தில் பு₃பு₄க்ஷுக்களைக் குறித்து விதி₄க்கப்பட்ட) கர்மங்கள் அனைத்தையும், **குர்வந் ஏவ** — (வித்₃யைக்கு அங்க₃மாக இயன்ற வரையில்) அநுஷ்டி₂த்துக்கொண்டே, **ஶதம் ஸமா:**— நூறு ஆண்டுகள், **ஜிஜீவிஷேத்**—உயிர்வாழ விரும்பக்கடவாய், **நரே**—(அக்கர்மங்களின்) ப₂லன்களில் பற்றற்ற, **த்வயி**—உன்னிடத்தில், **கர்ம**—முன்சொன்ன கர்மங்களில்

ஏதுவும், ந லிப்யதே—ஒட்டாது. (ஸம்ஸாரத்தில் கட்டி வைக்காது), இத:—இதைக்காட்டிலும், அந்யதா₂—வேறு விதமாக ந அஸ்தி—இல்லை.

2. அவ:— ப₂லனை உத்₃தே₃ஶித்து ஸம்ஸாரிகள் அனுஷ்டி₂க்கும் கர்மங்களையே, ஞானியானவன் ப₂லனில் பற்றற்று, ப்₃ரஹ்மவித்₃யைக்கு அங்க₃மாக அனுஷ்டி₂க்கவேண்டும் என்று இந்த மந்திரத்தில் விதி₄க்க விரும்பிய வேத₃ புருஷன் அந்தக் கர்மங்களுக்கு அங்க₃மான மூன்று வித₄மான பரித்யாக₃த்தின் அநுஸந்த₄ானத்தைச் சென்ற மந்திரத்தில் விதி₄த்தான். இவ்வநுஸந்த₄ானத்தை அங்க₃மாகக் கொண்ட கர்மங்கள் ப்₃ரஹ்மவித்₃யைக்கு அங்க₃மாக மோக்ஷமடையும் வரையில் அனுஷ்டி₂க்கவேண்டியவையாயிருக்கையால், அவைகளை ஆயுள் உள்ளவரையில் அனுஷ்டி₂க்கவேண்டும் என்றுவிதி₄க்கிறுன் இந்த மந்திரத்தில். ஸம்ஸாரிகள் ப₂லனை உத்₃தே₃ஶித்து அனுஷ்டி₂க்கும் யஜ்ஞம் முதலான வர்ணாஶ்ரம த₄ர்மங்களே முமுக்ஷுக்களால் ப₂லனில் பற்றில்லாமல் ப்₃ரஹ்மவித்₃யைக்கு அங்க₃மாக அனுஷ்டி₂க்கப்படவேண்டும் என்று, "ஸர்வதா₂பி த ஏவ உப₄ய லிங்கா₃த்" [3-4-34] என்னும் ப்₃ரஹ்ம ஸூத்ரத்தில் நிர்ணயிக்கப்பட்டது இங்கு அநுஸந்தி₄க்கத்தக்கது.

வ்யா:— (ஏவம்) முன்மந்திரத்தில் சொன்னபடி மூன்று வகையான த்யாகா₃நுஸந்த₄ானங்களோடு, முமுக்ஷுவுக்கு உபதே₃ஶம் செய்யும் ப்ரகரணமாயிருக்கையால், 'ஜிஜீவிஷேத்' என்னும் வினைச்சொல்லை ஒட்டி "முமுக்ஷு: ப₄வாந்" [மோக்ஷமடைய விரும்பும் நீ] என்னும் எழுவாயை வருவித்துக்கொள்ளவேண்டும். (இஹ) ப்₃ரஹ்மவித்₃யையை அனுஷ்டி₂க்கும் இப்பிறப்பில். (கர்மாணி) தத்தம் வர்ணாஶ்ரமங்களுக்கு அநுகு₃ணமாக இதுவரையில் ஸம்ஸாரிகளைக்குறித்து விதி₄க்கப்பட்ட நித்ய நைமித்திக காம்ய கர்மங்கள் அனைத்தையும், (குர்வந் ஏவ) வித்₃யைக்கு அங்க₃மாக இயன்றவரையில் அநுஷ்டி₂த்துக்கொண்டே. இதனால் வர்ணாஶ்ரமத₄ர்மங்களை உபாஸகன் கைவிடக்கூடாது என்று தெரிவிக்கப்படுகிறது. "யஜ்ஞ தா₃ந தப: கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத் | யஜ்ஞோ தா₃நம் தபஶ்சைவ பாவநாநி மநீஷிணாம் ||" [கீ₃தை 18-5] [யஜ்ஞம், தா₃னம், தவம் முதலான வைதிக கர்மங்கள் முமுக்ஷுவால் ஒருபோதும் கைவிடத்தக்கவை

யல்ல; (மோக்ஷமடையும் வரையில் தினந்தோறும்) அநுஷ்டி₂க்கத் தக்கவையேயாகும்; ஏனெனில்; உபாஸகர்களுக்கு அவை உபாஸநம் நிறைவடைவதற்குத் தடையாயிருக்கும் பாபங்களைப் போக்குகின்றனவன்றோ] என்று கீ₃தையில் கண்ணனும் அருளினனன்றோ. இத்தால் முமுக்ஷுக்கள் கர்மங்களை விடவேண்டும் என்று கூறும் ஶங்கரரின் மதம் வேத₃புருஷனும், வேத₃ ப்ரதிபாத்₃யனும் உகந்ததல்ல என விளங்குகிறது. (ஶதம் ஸமா;) நூறு ஆண்டுகள், தன் ஆயுள் முழுவதும் என்று கருத்து. "ஶதாயு: புருஷ:" [யஜு-கா-1-5-1-6] என்று வேத₃த்தில் மனிதனுடைய ஆயுள் நூறு ஆண்டுகள் என்கையால் 'ஶதம் ஸமா:' என்கிறது. "வேதநூற்பிராயம் நூறு" என்ற தொண்டரடிப்பொடியாழ்வாரும், நூறு வயஸ்ஸு வாழ்வது அரிது என்னும் கருத்துத்தோன்ற "மனிசர்தாம் புகுவரேலும்" என்று அருளினாகையாலே, "ஆயுள் முடியும் வரையில்" என்று பொருள் கொள்வது உசிதம். ஶதஶப்₃த₃ம் 'அநேகம்' என்றும் பொருள் படும். "ப்₃ரஹ்ம வித்₃யை முடியும் வரையில்" என்று கருத்து. (ஜிஜீவிஷேத்) வாழ விரும்பவேண்டும், ஞானியான உபாஸகனும் ப்₃ரஹ்மவித்₃யை நிறைவடையும்வரையில் வாழ்வதும், வித்₃யாங்க₃மான கர்மங்களை அநுஷ்டி₂ப்பதும் விரும்பத்தக்கது என்னும் கருத்தை "குர்வந்நேவ" "ஜிஜீவிஷேத்" என்னும் பத₃ங்களாலே காட்டுகிருன் வேத₃புருஷன். இனி, "ஸம்ஸாரிகளைக் குறித்து விதி₄க்கப்பட்ட கர்மங்கள் அனைத்தையும் இவனும் அநுஷ்டி₂த்து வந்தானுனல், முமுக்ஷுவான இவனுக்கும் ஸம்ஸாரப₃ந்த₄ம் தவிர்க்கமுடியாததாகிவிடுமே" என்னும் கேள்விக்கு பதிலளிக்கிருன்—(நரே த்வயி) கர்மங்களின் ப₂லன்களில் பற்றற்றவனுன உன்னிடத்தில் "ந ரமதே இதி நர:" என்னும் வ்யுத்பத்தியாலே, நரஶப்₃த₃ம் கர்மங்களில் பற்றற்றவனைக் குறிக்கிறது. "இக்கர்மங்களின் ப₂லன் எனக்குத் தேவையில்லை" என்னும் அநுஸந்தா₄னமுடைய உன்னிடத்தில். (கர்ம) முற்கூறிய கர்மங்களில் எந்தக் கர்மமும். (ந லிப்யதே) ஒட்டாது; ஸம்ஸார ப₃ந்த₄த்தை விளைக்காது என்று கருத்து. (இத: அந்யதா₂ ந அஸ்தி) 'பலனில் பற்றற்ற உன்னிடத்தில் கர்மம் ப₃ந்த₄த்தை விளைக்காது' என்னும் நிலைக்கு வேறுபட்ட நிலை ஒருபோதும் வராது. ஆகையால் இது உண்மையேயொழிய வெறும் புகழுரையல்ல என்று கருத்து. ப்₃ரஹ்மஸூத்ரத்தில் "ஸ்துதயேऽநுமதிர்வா" [3-4-14] என்னும் ஸூத்ரத்தின் பா₄ஷ்யத்திலும், ஶ்ருதப்ரகாஶிகையிலும் இம் மந்திரம் இவ்வண்ணமே விளக்கப்பட்டது.

இங்ஙனன்றிக்கே,

"வேத₃ாந்தாந் ஶங்கராத்₃யை: குமதிபி₄ரஸத₃ர்த்த₂ாந்
ஹிநீதாம்ஶ்ச பூ₄யஸ்ஸ்வார்த்தே₂ தாத்பர்யயுக்தாந் கலயிது-
மபி ச ஸ்ரீஶட₂ார்யாத்₃யப₄க்தை: ।
ப்ரோக்தாந் தி₃வ்யப்ரப₃ந்த₄ாந் ஶரணவரண யோக₃ாத்-
மகாந் ப்ரஸ்பு₂டார்த்த₂ாந் க்ருத்வோத்₃த₄ர்த்தும் ப₄வாப்₃-
தே₄ரகி₂லஜநமபூ₄த₃ யோ மஹாபூ₄தத₄ாம்நி ॥"

[ஶங்கரர் முதலான வக்ரபுத்தியுடையவர்களாலே அவப்பொருளுரைக்கப்பட்ட வேதாந்த வாக்கியங்களை மறுபடியும் உண்மைப் பொருள் விளங்குமவையாகச் செய்வதற்காகவும், அதற்கும்மேலே நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களாலே அருளிச்செய்யப்பட்ட ஶரணுகதி சாஸ்திரங்களான திவ்யப்ரபந்தங்களைப் பொருள் விளங்கச்செய்து ஸம்ஸாரக்கடலினின்றும் எல்லா ஜனங்களையும் கைதூக்கிவிடுவதற்காகவும் எம்பெருமானர் ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்தருளினர்] என்றும்,

"வேத₃ாந்தாநாமஸீம்நாம் கு₃ருதரக₃ஹநார்த்தை க வாக்ய
த்வபூர்வம் வ்யாக்₂யாத்ருத்வாச்ச ஶேஷம் கு₃ருப₄ர-
வஹநாதீ₃ஶஶீதுஸ்ஸைந்யநாத₂ம் ।
ஸாது₄த்ராணுத் தத₃ந்யப்ரமத₂நகரணுச்சாபி தத்பஞ்ச-
ஹேதீநாசார்யத்வஸ்ய பூர்த்யா யமுருதரக்ருபம் ஸ்ரீபதிம்
சாஹுராரார்யா: ॥"

[எல்லையற்ற வேதாந்தங்களுடைய மிகப் பரந்த ஆழ்ந்த கருத்துக்கள் ஒருமிடருனவையே என்று நிலைநாட்டி வியாக்கியானம் செய்கையால் ஆதிசேஷனின் அவதாரமென்றும், பகவந்நியமனமாகிற பெரும் ப₄ாரத்தை ஏற்கையால் ஸர்வேஶ்வரனுடைய சேனை முதலியாரின் அவதாரமென்றும், நல்லோர்களை ரக்ஷிக்கையாலும், தீயவர்களைத் தொலைப்பதாலும் அவனுடைய பஞ்சாயுதங்களின் அவதாரமென்றும், ஆசார்யத்வபூர்த்தியாலே ஶ்ரிய:பதியான அவனுடைய அவதாரமென்றும் பெருங்கருணையுடைய உடையவரைப்பற்றி நல்லோர்கள் கூறுகின்றனர்] என்றும்,

"ஶ்ருத்யர்த்த₂ாந் ப்ராப்ய தத்வேந ச வரத₃முக₂ாத₃ாஜ்ஞயா
தஸ்ய ஸர்வம் ஸங்க₃ம் த்யக்த்வா த்ரித₃ண்ட₂ாஞ்சித-
மஹிதகரோ ரங்க₃த₄ாம்ந்யாஸ்த பஶ்சாத் ।

**ஆர்யைஸ்ஸாகஞ்ச லக்ஷ்மீரமணக்ருதபத₂ாந் தி₃வ்ய-**
**தே₃ஶாந் த₄ராயாம் ஸேவம் ஸேவம் ப்ரகல்ப்யாத₂ ச**
**மஹிதஸமாராத₄நம் தத்ர தத்ர ॥"**

[வேதார்த்தங்களைப் பேரருளாளன் மூலமாக (திருக்கச்சிநம்பி களிடமிருந்து) உள்ளபடி அறிந்து, அந்தப் பேரருளாளனுடைய ஆணையாலே எல்லாப் பற்றுக்களையும் துறந்தபின்பு திரிதண்டத் தினால் அலங்கரிக்கப்பட்ட பெருமைபெற்ற திருக்கையை உடைய வராய் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்தார் எம்பெருமானார், பிறகு, ஸ்ரிய:பதியினாலே அவதாரங்களில் நடமாடப்பெற்ற இந்நிலவுலகி லுள்ள திவ்யதேசங்களில் ஸ்ரீவைஷ்ணவர்களுடன் கூடிநின்று ஸேவித்துக்கொண்டு ஆங்காங்கு சிறந்ததான ஆராதனமுறைகளை ஏற்படுத்திவிட்டு (ஸ்ரீரங்கம் எழுந்தருளினார்)] என்றும்,

**"யாதோ யஶ்ஶாரத₃ாயாஸ்ஸவித₄மத₂ தயா ஸத்க்ருதஸ்ஸ்வ-**
**ப்ரப₃ந்தே₄ா ப₃ாஹ்யாந் வேத₃ாத் குத்₃ருஷ்டீநபி கபடபடூந்**
**வாத₃தோ நிர்ஜிக₃ாய ।**
**ப்ராத₃க்ஷிண்யேந க₃ச்ச₂ந் பு₄வமகி₂லஜநம் வைஷ்ண**
**வாக்₃ர்யஞ்ச குர்வந் ந்யாஸாக்₂யம் தே₃வகு₃ஹ்யம்**
**பரமஹிதமபி த்₃ராக் ப்ரகாஶஞ்ச க்ருத்வா ॥"**

[ஸரஸ்வதியினுடைய ஸமீபத்தையடைந்து, அவளால் தம் க்ரந்த மான ஸ்ரீபாஷ்யத்தை அங்கீகரிக்கப்பெற்றவராய், வேதத்துக்குப் புறம்பானவர்களையும் (வேதத்தை ஒப்புக்கொண்டபோதிலும்) அதற்கு அவப்பொருளுரைத்து வஞ்சனைசெய்யவல்ல குத்₃ருஷ்டி களையும் ஜயித்தருளினார் யதிராஜர்; பாரததேசத்தை ப்ரதக்ஷிண மாக வலம்வந்துகொண்டு, சேதனர் அனைவரையும் பரமபாகவதர் களாகச் செய்துகொண்டு, பரமபுருஷார்த்தத்தையடையச் சிறந்த ஸாதனமாய், தேவரஹஸ்யமாயிருக்கும் 'ந்யாஸம்' எனப்படும் சரணாகதி தர்மத்தை விரைவில் வெளிப்படுத்திக்கொண்டு எழுந் தருளியிருந்தார்.] என்றும்,

**"ரங்கே₃ வேத₃ாந்தப₄ாஷ்யம் வ்யதநுத ச தத: கீடகண்ட₂ஸ்ய**
**ஹேதோர் க₃த்வா யோ ஹோஸலாக்₂யம் ஜநபத₃மமலே**
**யாத₃வாத்₃ரௌ நிவேஶ்ய ।**
**பஶ்சாத₃ாக₃த்ய ரங்க₃ம் கு₃ருவரமுக₂தோ வைதி₃காக்₃ர்யம்**
**விஶிஷ்டாத்₃வைதம் ஸித்₃த₄ாந்தமஸ்மிந் ஜக₃தி ப₃ஹு-**
**முக₂ம் விஸ்த்ருதம் காரயித்வா ।"**

[அதன்பிறகு ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீபாஷ்யத்தை அருளிச்செய்தார்; கிருமிகண்டன் காரணமாக 'ஹோசளம்' என்னும் தேசத்திற்குச் சென்று, குற்றமற்ற யாதவ கிரியிலே சேர்ந்து, பின்பு ஸ்ரீரங்கத்தை அடைந்து எழுபத்து நான்கு ஆசார்யர்களைக்கொண்டு வைதிக மதங்களுள் சிறந்த விஶிஷ்டாத்வைதம் என்னும் ஸித்தாந்தத்தை ஸ்ரீபாஷ்யகாரர் இவ்வுலகில் பலவிதமாகப் பரப்பிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்] என்றும்,

"அத்₃யாப்யாஸ்தே யது₃க்ஷ்மாப்₄ருதி மஹிதத₃யஸ்ஸாக்ஷுஷீம்
ஸ்வீய மூர்த்திம் குர்வாணஸ்தம் யதீந்த்₃ரம் கு₃ருகுலநரு-
பதிம் நௌமி ராமாநுஜார்யம் ||"

[ஸ்ரீயதுகிரியில் தம்முடைய திவ்யமங்களவிக்ரஹத்தைக் கண்ணுக்கு விஷயமாக்கிக்கொண்டு, புகழ்பெற்ற கருணையுடையவராய், இப்போதும் (அர்ச்சாரூபியாய்) எழுந்தருளியிருக்கிருர் எம்பெருமானுர்; குருபரம்பரைக்குத் தலைவரான அவரை வணங்குகிறேன்] என்றும்.

"கீ₃தாபா₄ஷ்யம் பூ₄ஷ்ய வேதா₃ந்தபா₄ஷ்யம் ஸாரம் தீ₃பம்
கிஞ்ச க₃த்₃யத்ரயஞ்ச |
வேதா₃ர்த்தா₂நாம் ஸங்க்₃ரஹம் நித்யயாக₃ம் ப்ராஹைதாந்
யஸ்தம் யதீந்த்₃ரம் ப₄ஜேஹம் ||"

[கீதாபாஷ்யத்தையும், புகழத்தக்க வேதாந்த (ஸ்ரீ)பாஷ்யத்தையும் வேதாந்த ஸாரத்தையும், வேதாந்த தீபத்தையும், கத்யத்ரயத்தையும், வேதார்த்த ஸங்க்ரஹத்தையும், நித்ய திருவாராதனம் பற்றிய க்ரந்தத்தையும் அருளிய யதிராஜரை ஆஶ்ரயிக்கிறேன்] என்றும்,

"ஹஸ்த்யத்₃ரீஶப்ரஸாதா₃த₃தி₄க₃தநிக₃மாந்தார்த்த₂கோ
யோ ஹி ஜித்வா பா₃ஹ்யாந் வேதா₃த் குத்₃ருஷ்டீநபி
நிகி₂லஜநம் வைஷ்ணவாக்₃ர்யஞ்ச க்ருத்வா |
ரங்கே₃ வேதா₃ந்தபா₄ஷ்யம் வ்யதநுத தமஹம் நௌமி
ராமாநுஜார்யம் ஸ்ரீரங்கதா₄மாலயேஷு ப்ரகடகு₃ணக₃ணம்
ஸ்ரீபதிம் ஸேவமாநம் ||"

[அத்திகிரியருளாளனின் அருளினலே வேதாந்த விழுப்பொருள் அனைத்தையும் அறிந்தவராகி, வேதத்துக்குப்புறம்பான பா₃ஹ்யர்களையும், அவப்பொருளுரைக்கும் குத்₃ருஷ்டிகளையும் வென்று சேதனரனைவரையும் சிறந்த ஸ்ரீவைஷ்ணவர்களாகச் செய்து ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீபாஷ்யத்தையும் அருளிச்செய்தருளினர் எதிகட்கி

றைவர்; ஸ்ரீரங்கம்முதலிய திவ்யதேஶங்களிலே ப்ரஸித்திபெற்று விளங்கும் திருக்குணங்களை உடைய ஶ்ரிய:பதியை மங்களாஶாஸனம் செய்துகொண்டிருக்கும் அத்தகைய எம்பெருமானுரை யான் துதிக்கிறேன்.] என்றும் இப்படி பெரியபெருமாள் முதலானுர் பஹுமுகமாகப் பேசிவெளியிட்டார்கள். இப்படி ஸத்துக்களாலே ப்ராக்உக்தவைபவம் ஸங்க்ரஹேண உக்தமாய்த்து.

ஏவம்விதவைபவயுக்தரான இந்த எம்பெருமானுரைத் தத்பாகிநேய ஸௌநுவாய்த் தந்நாமத்தையுடையராய்த் தந்நாம குணஹர்ஷிதரான கந்தாடை(முதலி)யாண்டான் கனக்க அநுவர்த்தித்து " பரித்ராணய " [கீதை 4-8] [ஸாதுக்களை ரக்ஷிப்பதற்கும், தீயவர்களை அழிப்பதற்கும் வைதிக தர்மத்தை நிலைநிறுத்துவதற்கும் யுகந்தோறும் பிறக்கிறேன்] இத்யாதிப்படியே தேவரீர்,

"புண்யாம்போஜவிகாஸாய பாபத்வாந்தக்ஷயாய ச ।
ஸ்ரீமாநாவிரபூத்பூமௌ ராமாநுஜதிவாகர: ॥"

[புண்யமாகிற தாமரை மலருவதற்காகவும், பாவமாகிற இருள் அழிவதற்காகவும் ஸ்ரீராமாநுஜராகிய ஸூர்யன் இப்புவியில் அவதரித்தருளினுர்] என்னும்படி அவதரித்தருளின ஸ்ரீபெரும்பூதூரிலே ஸர்வகாலத்திலும் ஸர்வசேதநர்க்கும் ஸேவ்யமாம்படி தேவரீருடைய அர்ச்சாவிக்ரஹத்தை ஏறியருளப்பண்ணவேணும் என்று விண்ணப்பஞ்செய்ய ஸ்வாமியும் 'அப்படியே செய்யும்' என்று அநுமதிபண்ணியருள அப்போதே ஆண்டானும் அநுகூலனுன சில்பியை அழைப்பித்து.

" புண்ட்ரைர் த்வாதஶபிர்யுதம் விலஸிதம் தண்டைஸ் த்ரிபிர்மண்டிதம் காஷாயேந ஶிகோபவீதருசிரம்
தோர்மூலசக்ராம்புஜம் ।
ஆஸீநம் ஜலஜாஸநே ச துலஸீபத்மாக்ஷமாலாஞ்சிதம்
யுக்தஞ்சாஞ்ஜலிமுத்ரயா ரவிநிபம் ஸ்ரீபாஷ்யகாரம் பஜே ॥"

[பன்னிரண்டு ஊர்த்வபுண்ட்ரங்களை அணிந்திருப்பவரும், த்ரிதண்டத்தால் விளங்கி நிற்பவரும், காஷாயத்தினுல் அலங்கரிக்கப்பெற்றவரும். ஶிகையினுலும், பூணூலாலும் அழகு பெற நிற்பவரும். திருத்தோள்களில் சக்கரம் சங்குகளால் திருவிலச்சினையிடப்பெற்றவரும், பத்மாஸனத்தில் வீற்றிருப்பவரும், துளஸிமணிமாலையும் தாமரைமணிமாலையும் அணிந்தவரும், அஞ்ஜலிமுத்ரையுடன் கூடியவரும், ஸூர்யனை நிகர்த்தவருமான ஸ்ரீ பாஷ்யகாரரை

ஆஶ்ரயிக்கிறேன்:] என்கிற ப்ரார்த்2யமான வார்த்தகவிக்3ரஹாகாரத்தை ஸேவிக்கப்பண்ண, அவனும் "ஆதியஞ்சோதியுருவையங்குவைத்திங்குப்பிறந்த" என்கிறபடியே அர்ச்சாவிக்ரஹமாக எழுந்தருளப்பண்ணி ஸந்நிதியிலே கொண்டு வந்து வைக்க, திருக்கண்சாத்தியுகந்தருளி. அந்த விக்ரஹத்திலே தம்முடைய ஸர்வ ஶக்தியும் ப்ரகாஶிக்கும்படி கூ3ரடூ1ாஶிங்க3 நம் பண்ணி 'இவ்விக்3ரஹத்தைப் புஷ்ய மாஸத்தில் கு3ருபுஷ்யத்திலே ப்ரதிஷ்டி2ப்பியும்' என்று திருமுகமெழுதி தி3நங்குறித்து அனுப்பியருள. ஆண்டானும் அப்படியே திருவடிகளிலே ஸேவித்து அந்த விக்ரஹத்தை எழுந்தருளுவித்துக்கொண்டு வந்து மூல விக்ரஹத்தையும் ஏறியருளப் பண்ணுவித்துத் திருமுகப்படியே திருப்ரதிஷ்டையும் செய்வித்தருளினர்.

இங்கே ப்ரதிஷ்டி3ப்பிக்கிற அற்றைத்திவஸத்திலே திருமேனியிலே மிகவுந் தளர்ச்சியாய் ப3லஹாநியுண்டாக இராமாநுசனும் இதேதென்று பராமர்ஶித்து 'ஆண்டானுக்கு எழுதிக்கொடுத்த தி3வஸம் எது?' என்று கேட்டருள, அந்தத் திவஸம் அன்றுதானுயிருக்கக்கண்டு விஸ்மயப்பட்டு 'ஶீக்1ரம் வருவது' என்று ஆண்டானுக்குத் திருமுகம் போகவிட்டருள. அவரும் திருமுகத்தை ஶிரஸா வஹித்து அப்படியே மீண்டெழுந்தருளித் திருவடிகளை ஸேவித்துக்கொண்டிருந்தார்.

அநந்தரம் அங்குத்தைக்கு அத்யந்தம் அந்தரங்கரான ஆண்டான் முதலான முதலிகளெல்லாரும் பழுத்திருக்கிற தேமாவைக் கிளித்திரள்கள் காத்துக்கொண்டிருக்குமாபோலே. தத்துல்யரான இவர்களும் விமலசரமவிக்ரஹத்தை 'கையிற்கனி' இத்யாதிப்படியே * மெய்யிற் பிறங்கியசீரைப் பழுக்க ஸேவித்துக்கொண்டு. "அடையார்கமலத்து அலர்மகள் கேள்வன்கையாழியென்னும். படையோடு நாந்தகமும் படர்தண்டு மொண்சார்ங்கவில்லும் புடையார் புரிசங்கமும் இந்தப் பூதலங் காப்பதற்கென்று இடையே யிராமாநுச முனியாயின விந்நிலத்தே" என்றும்,

**"ஶேஷோ வா ஸைந்யநாதே2ா வா ஶ்ரீபதிர்வேதி ஸாத்விகை:।**
**விதர்க்யாய மஹாப்ராஜ்ஞைர்யதிராஜாய மங்க3ளம் ॥"**

[ஶ்ரீப4ாஷ்யகாரமங்க3ளம் 19]

[இவர் ஆதிசேஷனோ? ஸேனைமுதலியாரோ? ஶ்ரிய:பதியோ? என்று பேரறிவாளர்களான ஸாத்விகர்களாலே உல்லேகி2க்கப்படும் யதிராஜர்க்கு மங்க3ளம்] என்றும்,

"தத்ரோத,ஞ்சதி மண்டபே யதிவர: கக்ஷ்யாந்தரஸ்தே, வஸந்
பூர்வம் ராவணிகம்ஸமுக்,யத,நுஜாந் ராமாநுஜாப்,யாம்
ஹதாந் ।
மத்வா ஶங்கர யாத,வாதி,முக,தோ பூ,யோऽவதீர்ணாந்
பு,வம் தத்,ப,ங்க,ாய க்ருதோத,யஸ் தது,சிதாம்
ராமாநுஜாக்,யாம் வஹந் ॥"

[திரேதை, துவாபரம் ஆகிய முன் யுகங்களில் ராமாநுஜர்களால் (தசரத ராமனின் தம்பியான லக்ஷ்மணனாலும் பலராமனின் தம்பியான கண்ணனாலும்) அழிக்கப்பட்ட ராவணி (ராவணபுத்ரனான இந்திரஜித்து) கம்ஸன் முதலான அஸுரர்களே சங்கரர். யாதவ ப்ரகாசர் முதலானோராக இப்புவியில் பிறந்திருப்பவர்களாக அறுதியிட்டு. அவர்களை அடக்குவதற்காக அவதரித்தருளியவரும், அதற்குத்தக்க ராமாநுஜன் என்னும் திருநாமத்தை வஹிப்பவருமான யதிராஜர் இரு மதிள்களுக்கு இடையிலுள்ள மண்டபத்தில் எழுந்தருளிப் பெருமைபெற்று விளங்குகிறார்.] என்றும்,

"வ்யாஸோ வா ப,க,வாந் பராஶரமுநி: ஸ்ரீஶௌநகோவாऽ
த,வா, ஸாக்ஷாந்நாரத, ஏவ வா ஶட,ரிபுர் வாகீ,ஶ்வரோ
வா ஸ்வயம் ।
லோகேஶ: புருஷோத்தம: ப,ணிபதிஶ்ஶேஷீ ஜக,ச்சே,ஷி-
ணீத்யாக்,யாதும் ஜக,தாம் ஹிதாய ஸமபூ,த்
ராமாநுஜார்யோ முநி: ॥"

[முனிவரான ஸ்ரீராமாநுஜர் பகவான் வ்யாஸரோ என்றும், பராசர முனிவரோ என்றும், ஸ்ரீசௌனகரோ என்றும், ஸாக்ஷாத் நாரதரோ என்றும், சடகோபரோ என்றும், ப்ருஹஸ்பதியோ என்றும், ஆதிசேஷனோ என்றும், லோகநாதனும் சேஷியான புருஷோத்தமன் தானோ என்றும், உலகுக்கு சேஷிணியான பெரிய பிராட்டியார் தானோ என்றும், யாவரும் புகழலாம்படி உலகங்களுக்கு நன்மையின் பொருட்டு அவதாரம் செய்தருளினார்] என்றும் சொல்லுகிறபடியே அநேக அவதார விசேஷமென்று ஆதரித்துக்கொண்டிருந்தார்கள்.

இத்தால், ஏவம்வித,மாஹாத்ம்யயுக்தரான இவருடைய வைப,வமும்,

"சரிதம் ரகு₄நாத₂ஸ்ய ஶதகோடி ப்ரவிஸ்தரம் |
ஏகைகமக்ஷரம் ப்ரோக்தம் மஹாபாதகநாஶநம்" ||

[ரகுநாதனின் சரித்திரம் நூறுகோடி கிரந்தம் விஸ்தாரமுள்ளது. அதில் ஒவ்வோரக்ஷரமும் பஞ்சமஹாபாதகங்களையும் போக்க வல்லது.] என்கிற சக்ரவர்த்தித் திருமகன் வைபவம்போலே அவாங்மநஸகோ₃சரமிறே. ஸாக₃ரத்தைக் கைந்நீச்சாலே கடந்து அக்கரையேறினாலும், உத₃தி₄யைச் சிறுங்கித்தாலும் உடையவர் வைபவம் அடையச் சொல்லப் போகாதிறே. யத₂ாமதி யத₂ாஸ்ருதமாகச் சொன்னதித்தனை. ப₃ஹுஶ்ருதராய் பு₃த்₃தி₄ப₃ாஹுள்ய முடைய பெரியோர்கள் விஶத₃மாகக் கண்டு கொள்ளக்கடவரிறே.

இப்படி அவதாரவிஶேஷமான இவருக்கு

"ஶரச்ச₂தம் வ்யதீயாய ஸவிம்ஶமதி₄கம் ப்ரபே₄ா:"

[ஜக₃த்₃கு₃ருவான எம்பெருமானருக்கு நூற்றுக்குமேல் இருபது வருடங்கள் கழிந்தன] என்கிறபடியே நூற்றிருபத்தஞ்சிலே நூற்றிருபது திருநக்ஷத்ரம் பூர்ணமாய்த்து.

"வையம்மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே" என்னும்படியான இவர், தம்முடைய அவதார ரஹஸ்யஜ்ஞாநத்தாலும், தம்முடைய விக்₃ரஹஸேவையாலும், தத்ப்ரத₃க்ஷிண நமஸ்காராதி₃களாலும், சதுரக்ஷரியாய்ச் சதுரமான தம்முடைய திருநாம வைப₄வத்தாலும். ஸ்வதிவ்யமங்க₃ள விக்₃ரஹத்₄யாநத்தாலும், தத₃ேக நிஷ்டை₂யாலும். தத்கைங்கர்யைகபரதையாலும், ப₃ாஷ்ப்ரத₃ாநாதி₃களாலும், மந்த்ரரத்ந ப்ரத₃ாநாதி₃களாலும், தத₃ர்த்யாம்ருத த₂ப்ரதிபாத₃நத்தாலும், ஸ்வபாது₃கா ப்ரத₃ாநத்தாலும், ஸ்வபாத₃தீர்த்த₂ஸ்வீகாரத்தாலும். ஸாபாவநமான ப்ரஸாத₃ ஸ்வீகாரத்தாலும், பாத₃ஸ்பர்ஶபவித்ரதையாலும், ஸஞ்சாரபூதமான பாத₃ஸஞ்சரணத்தாலும். ஸ்வபாவந கரஸ்பர்ஶத்தாலும், அப்படியேயான கடாக்ஷ விஶேஷத்தாலும், பஞ்சஸம்ஸ்காராதி₃களாலுண்டான ஸம்ப₃ந்த₄ விஶேஷத்தாலும்,

" புநந்தி பு₄வநம் யஸ்ய பாத₃ாஶ்ரிதபத₃ாஶ்ரிதா: |
கடாக்ஷாதி₃பி₄ரேவாத்ர "

[எவருடைய திருவடியை ஆஶ்ரயித்தவர்களின் திருவடியை அண்டியவர்கள்—தம் கடாக்ஷம், பேச்சு முதலானவற்றால்

உலகையே பரிசுத்தப்படுத்துவரோ] என்ற ஸ்வகீய ஸம்பந்தத்தாலும்,

"பா₃லமூகஜடா₃ந்த₄ாஶ்ச பங்க₃வோ ப₃தி₄ராஸ்ததா₂ |
ஸதா₃சார்யேண ஸந்த்₃ருஷ்டா: ப்ராப்நுவந்தி பராங்க₃திம் ||"
[பா₄ரத்₃வாஜஸம்ஹிதை 1-32]

[குழந்தைகளும், ஊமைகளும், மந்தர்களும், குருடர்களுங்கூட நல்லாசிரியனாலே கடாக்ஷிக்கப்பட்டார்களாகில் பரமபதமடைகிறார்கள்.] என்றும்,

"ஸாக்ஷாந் நாராயணோ தே₃வ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் |
மக்₃நாநுத்₃த₄ரதே லோகாந் காருண்யாச் சா₂ஸ்த்ர பாணிநா ||" [ஜயாக்₂யஸம்ஹிதை]

[தேவனான நாராயணனே மனிதவுருவை எடுத்துக்கொண்டு சாஸ்திரமாகிற கையினாலே ஸம்ஸாரத்தில் அழுந்திக் கிடப்பவர்களைத் தூக்கி விடுகிறான்] என்றும்,

"அந்வயாத₃பி சைகஸ்ய ஸம்யங்ந்யஸ்தாத்மநோ ஹரௌ |
ஸர்வ ஏவ ப்ரமுச்யேரந் நரா: பூர்வேऽபரே ததா₂ ||"
[பா₄ரத்₃வாஜஸம்ஹிதை 1-31]

[ஹரியிடம் நன்கு ஆத்மஸமர்ப்பணம் செய்தவன் ஒருவனோடு ஸம்பந்தத்தாலேயே, அவனுக்கு முற்பட்டவர்களும் பிற்பட்டவர்களும் மோக்ஷமடைகின்றனர்.] என்றும்,

"பஶுர்மநுஷ்ய: பக்ஷீவா யே ச வைஷ்ணவஸம்ஶ்ரயா: |
தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத்₃ விஷ்ணோ: பரமம் பத₃ம் ||"
[ஶாண்டி₃ல்யஸ்ம்ருதி 1-15]

[வைஷ்ணவன் ஒருவனை ஆச்ரயித்திருப்பவர்கள், பசுவாகவோ, மனிதனாகவோ, பக்ஷியாகவோ இருந்தாலும், அவ்வொருவனாலேயே அவர்கள் அனைவரும் விஷ்ணுவின் பரமபதத்தை அடைகின்றனர்] என்றும் சொல்லுகிறபடியே ஏதேனுமாயுள்ளதொரு ஸ்வஸம்ப₃ந்த₄ விஶேஷத்தாலும், ஜ்ஞாத்ரஜ்ஞாத்ருவிபா₄க₃மற ஜக₃த்தையெல்லாம் உஜ்ஜீவிப்பித்தும், இனிமேலும் ஸ்வஸம்ப₃ந்தி₄களாயுள்ளவர்களை "ஆரியர்காள் கூறும்" என்று நியமித்தும் இப்படி அவதாரகார்யம் தலைக்கட்டினவாறே;

उत्तमम् । यज्ज्ञानं ज्ञात्वा सर्वे मुनयस्तन्मननशीलाः इतः—संसार-[बन्धात्] मण्डलात्परां सिद्धिं गताः— परां —परिशुद्धात्मस्वरूपप्राप्ति-रूपां सिद्धिमवाप्ताः ॥ १ ॥

---

இனி ஶ்லோகத்தின் பிற்பாதியாலே, இந்த ஜ்ஞானத்தினுல் கிடைக்கும் இஷ்டப்ராப்தி ரூபமான ப2லனைக் கூறுகிருன்: (யத் ஜ்ஞாத்வா) எந்த ஜ்ஞானத்தை அறிந்து. (ஸர்வே முநய:) அவ்வறிவை எப்போதும் மனனம் செய்யும் அனைவரும். இந்த ஞானத்தைப்பற்றி அறிவதால்மட்டும் மேலான ஸித்3தி4 கிடைத்து விடாதாகையாலும், இவ்வறிவைப்பெற்று அதை மனனம் செய்ப வர்களுக்கே மேலான ஸித்3தி4 கிடைக்குமாகையாலும், "எந்த ஞானத்தைப்பற்றி அறிந்த முனிவர் அனைவரும்" என்று பொருள் கொள்ளாமல், "எந்த அறிவை அறிந்து அதை மனனம் செய்யும் அனைவரும்" என்று பொருள்கொள்ளப்பட்டது, (இத: பராம்) இந்த ஸம்ஸாரமண்ட3லத்திற்கு மேலான. 'இத:' என்பதற்கு 'இந்த ஜ்ஞானத்தினுல்' என்று பொருள்கொண்டு, கிடைக்க விருக்கும் மேலான ஸித்3தி4க்கு இந்த ஜ்ஞானம் காரணம் என்று இப்பத3ம் காட்டுவதாகக் கொள்ளக் கூடாதோ? எனில்: இப் பத3ம் இல்லாவிடிலும் "யத் ஜ்ஞாத்வா பராம் ஸித்3தி4ம் க3தா:" என்று முற்பட்டதான ஞானத்தையும், பிற்பட்டதான பரஸித்3தி4 ப்ராப்தியையும் சேர்த்துப்படிப்பதாலேயே (பூ4தப4வ்ய ஸமுச் சார ந்யாயத்தாலே), முற்பட்டது பிற்பட்டதற்குக் காரணம் என்று ஸித்திக்குமாகையாலும், அடுத்து, 'மேலான ஸித்3தி4' என்று உள்ளவிடத்தில், 'எதற்கு மேலான?' என்னும் கேள்வி எழுகை யாலும், இப்பத3ம் ஹேதுவைக்காட்டுவதென்று கொள்ளாமல், 'இத: பராம்' என்னும் தொடருக்கு 'இந்த ஸம்ஸார மண்ட3லத் திற்கு மேலான' என்று பொருள் கொள்ளப்பட்டது. (பராம் ஸித்3தி4ம் க3தா:) பரிஶுத்3த4ாத்ம ஸ்வரூபத்தை அடைவதாகிற மேலான ஸித்3தி4யை அடைந்தார்களோ. ப4க்தியோகத்தா லேயே கிடைக்கக்கூடிய ப4க3வத் ப்ராப்தி—மேல் சொல்லப் போகும் ப்ரக்ருதிபுருஷ விவேக ஜ்ஞானத்தாலும், 'ஸத்வம் முத லான முக்குணங்கள் ஸம்ஸார ப3ந்த4த்திற்குக் காரணம்' என்று அறிவதாலும் கிடைக்காதாகையால், 'பராம் ஸித்3தி4ம்' என்பதற்கு இவ்வறிவுகளால் கிடைக்கக்கூடிய பரிஶுத்3த4ாத்ம ப்ராப்தியே பொருளாகக்கொள்ளப்பட்டது. ஆக, "ஜீவன் ஸம்ஸார மண்ட3

भा ॥ पुनरपि तज्ज्ञानं फलेन विशिनष्टि-

इदं ज्ञान[म]मुपाश्रित्य मम साधर्म्यमागताः ।
सर्गेऽपि नोपजायन्ते प्रलये न व्यथन्ति च ॥ २

**2. இத₃ம் ஜ்ஞாந(ம)முபாஶ்ரித்ய மம ஸாத₄ர்ம்ய மாக₃தா: |**
**ஸர்க்கே₃ऽபி நோபஜாயந்தே ப்ரளயே ந வ்யத₂ந்தி ச ||**

**இத₃ம் ஜ்ஞாநம்**—(சொல்லப்போகும்) இந்த அறிவை, **உபாஶ்ரித்ய**—அடைந்து, **மம ஸாத₄ர்ம்யம்**—என்னோடு ஸாம்யத்தை, **ஆக₃தா:** — அடைந்தவர்களாய், **ஸர்க்கே₃, அபி ந உபஜாயந்தே**—(அவர்கள்) இங்கு படைக்கவும் படுவதில்லை; **ப்ரளயே ந வ்யத₂ந்தி ச**— அழிக்கவும் படுவதில்லை,

**2 இந்த வறிவை யினிதார்ந்திங் கென்னொப்பா**
**மந்த வுயர்வை யடைந்தவர்கள்- பந்தமுடன்**
**சற்கத்தி லும்பிறவார் தாந்துயரஞ் சாரார்க**
**ளொற்கப் பிரளயத்தி னுள்.**

**இந்த அறிவை**—(சொல்லப்போகும்) இந்த ஞானத்தை, **இனிது ஆர்ந்து** — இனிதாகப்பெற்று, **இங்கு என் ஒப்பாம் அந்த உயர்வை அடைந்தவர்கள்**—இத்தேரில் வீற்றிருக்கும் என்னோடு ஒத்திருக்கும் அத்தகைய பெருமையைப் பெற்றவர்களாய், **சற்கத்திலும் பந்தமுடன் பிறவார்**—(அவர்கள்) ஸம்ஸாரத்தில் கட்டுப்பட்டுப் பிறப்பை அடைவதில்லை; **ஒற்கப்பிரளயத்தினுள் தாம் துயரம் சாரார்கள்**—மரணமாகிற துன்பத்தையும் அடைவதில்லை.

---

லத்தில் கட்டுப்படுவதற்கு ஸத்வாதி₃கு₃ணங்கள் காரணமாகின்றன; அந்தக்கட்டிலிருந்து நீங்குவதற்கு வழி யாது என்று மேலே சொல்லவிருக்கிற விஷயங்களைப்பற்றிய அறிவு, அதை மனனம் செய்யும் ஜீவனை இந்த ஸம்ஸார மண்ட₃லத்திலிருந்து விடுவித்து அவனுக்குத் தனது ஆத்ம ஸ்வரூபத்தை என்றும் அநுப₄விப்பதாகிற மேலான பயனை அளித்துவிடும்" என்று சொல்லிற்றாயிற்று. 1.

भा ॥ इदम्—वक्ष्यमाणं ज्ञानमुपाश्रित्य मम साधर्म्यमागताः—मत्साम्यं प्राप्ताः, सर्गेऽपि नोपजायन्ते- न सृजिकर्मतां भजन्ते; प्रलये न व्यथन्ति च-न च संहृतिकर्मताम् [भजन्ते] ॥ २ ॥

---

2. இவ்வத்தியாயத்தில் சொல்லப்போகும் அறிவை மனனம் செய்பவர்கள் தம் ஆத்மாநுப4வமாகிற இஷ்ட ப்ராப்தியைப் பெறு வார்கள் என்றது சென்ற ஶ்லோகத்தில்; பிறப்பு இறப்பு முத லான அநிஷ்டங்களும் நீங்கப்பெறுவார்கள் என்கிருன் இந்த ஶ்லோகத்தில், (இத3ம் ஜ்ஞாநம் உபாஶ்ரித்ய) இவ்வத்தியாயத் தில் மேலே சொல்லப்போகும் இந்த ஜ்ஞாநத்தை அடைந்து; ‘அபாஶ்ரித்ய’ என்று பாட2மானபோது ‘பற்ருசாகக்கொண்டு’ என்று பொருள்படுகிறது. ‘‘ஜ்ஞாநம் ப்ரவக்ஷ்யாமி’’ என்று இவ் வத்தியாயத்தில் மேலே சொல்லப்போவதாகச் சென்ற ஶ்லோகத் தில் எடுக்கப்பட்டதையே இங்கு ‘‘இத3ம் ஜ்ஞாநம்’’ என்று அநுவாத3ம் செய்கிருனுகையால், ‘சொல்லப்பட்ட ஞானம்’ என்று பொருள் கொள்ளாமல், ‘சொல்லப்போகிற ஞானம்’ என்று பொருள்கொள்ளப்பட்டது. (மம ஸாத4ர்ம்யம் ஆக3தா:) என் னேடு ஸாம்யத்தை அடைந்தவர்களாய், ‘‘அபஹதபாப்மா’’ முத லான எட்டு கு3ணங்களின் ஆவிர்ப4ாவமே இந்த ஸாம்யம். இந்த ஸாம்யம் எத்தகையது என்பதை, ‘‘நிரஞ்ஜந: பரமம் ஸாம்ய முபைதி’’ [முண்ட3க 3-1-3] [ஸம்ஸார ஸம்ப3ந்த4மற்றவனுய் (முக்தாத்மா) என்னேடு மேலான ஒற்றுமையை அடைகிருன்] என்று ஶ்ருதியிலும் ஓதப்பட்டது. இதிலிருந்து முக்தியில் பரம னுக்கும் ஜீவனுக்கும் ஸ்வரூபைக்யம் ஏற்படுகிறது என்னும் அத்3வைதபக்ஷம் தள்ளப்படுகிறது. இந்த வேத3வாக்யத்தையும் ‘‘மம ஸாத4ர்ம்யமாக3தா:’’ என்னும் இப்பாத3த்தையும் [கீ3தை 12—3, 4, 5] ப4ாஷ்யத்தில் கைவல்யநிஷ்ட2ன் விஷய மாக எடுக்கையாலே, இங்கு சொல்லப்படுபவனும் கைவல்ய நிஷ்ட2னே என்றும், மறுபடியும் ஸம்ஸார ப்ராப்தியோ ப4க3வத் ப்ராப்தியோ இல்லாத தாழ்ந்த மோக்ஷமே கைவல்யாநுப4வம் என்றும் கீ3தாசார்யனுக்கும் ப4ாஷ்யகாரருக்கும் திருவுள்ளம் எனத் தெளிவாக விளங்குகிறது. எட்டாவது அத்தியாயத்தின் வியாக்கியானத்தின் இறுதியில் இணைக்கப்பட்ட கைவல்ய ஸித்3த4ாஞ்ஜநத்தில் இது அசைக்க முடியாதபடி நிலைநாட்டப்பெற்றது.

भा ॥ अथ प्राकृतानां गुणानां बन्धहेतुताप्रकारं वक्तुं सर्वस्य भूतजातस्य प्रकृतिपुरुषसंसर्गजत्वं * यावत्संजायते किञ्चित् (१३-२६) इत्यनेनोक्तं भगवता स्वेनैव कृतमित्याह-

मम योनिर्महद्ब्रह्म तस्मिन् गर्भं दधाम्यहम् ।
संभवस्सर्वभूतानां ततो भवति भारत ॥ ३

**3. மம யோநிர் மஹத்$_3$ ப்$_3$ரஹ்ம தஸ்மிந் க$_3$ர்ப்ப$_4$ம்**
**த$_3$த$_4$ாம்யஹம் ।**
**ஸம்ப$_4$வ: ஸர்வபூ$_4$தாநாம் ததோ ப$_4$வதி ப$_4$ாரத ॥**

**ப$_4$ாரத**—ப$_4$ரதகுலத்துதித்தவனே! **யோநி:** — (உலகனைத்துக்கும்) காரணமாய், **மம** என்னுடையதாய் **மஹத்**—பெரிதாயிருப்பதாய், **ப்$_3$ரஹ்ம யத்**—'ப்$_3$ரஹ்மம்' எனப்படும் மூலப்ரக்ருதி யாதொன்றுண்டோ. **தஸ்மிந்** — அதில், **க$_3$ர்ப்ப$_4$ம்**—(சேதனஸமஷ்டிரூபமான) க$_3$ர்ப்ப$_4$த்தை, **அஹம் த$_3$த$_4$ாமி**—நான் த$_4$ரிக்கச்செய்கிறேன்; **தத:**— இப்படி இரண்டையும் சேர்ப்பதால், **ஸர்வபூ$_4$தாநாம்**—(பிரமன் முதல் புல் ஈருகவுள்ள) எல்லா ஜீவராசிகளின், **ஸம்ப$_4$வ:**–பிறப்பும், **ப$_4$வதி**—உண்டாகிறது.

---

சென்ற ஶ்லோகத்தில் "பராம் ஸித்$_3$தி$_4$ம்" என்றதின் விவரணமான கு$_3$ணாஷ்டகத்தின் ஆவிர்ப$_4$ாவத்தை ஶ்லோகத்தின் முதற்பாதியிலே சொல்லி, "இத: பராம்" என்றதின் விவரணமான ஸம்ஸார மோசனமாகிற அநிஷ்டநிவ்ருத்தியைப் பிற்பாதியிலே விளக்குகிருன்—(ஸர்க்கே$_3$ऽபி நோபஜாயந்தே) ஸம்ஸார மண்ட$_3$லத்தில் ஸ்ருஷ்டிக்கு விஷயமாகிப் பிறப்பதில்லை. (ப்ரளயே ந வ்யத$_2$ந்தி ச) ப்ரளயம் எனப்படும் ஸம்ஹாரத்திற்கு விஷயமாகி மரணத்துன்பத்தை அநுப$_4$விப்பதுமில்லை. 'ப்ரளயத்தில் துன்புறுவதில்லை' என்று ஶப்$_3$த$_3$ார்த்த$_2$மாயிருந்தபோதிலும், 'ஸ்ருஷ்டிக்கு விஷயமாகிப் பிறப்பதில்லை' என்று மூன்ரும் பாத$_3$த்தில் சொன்னதையொட்டி, 'ஸம்ஹாரத்திற்கு விஷயமாகி மரணத்துன்பத்தை அடைவதில்லை' என்று பொருள் கொள்ளப்பட்டது. ஆக, முதலிரண்டு ஶ்லோகங்களாலும் இவ்வத்தியாயத்தில் சொல்லப்போகும் அறிவினுல் விளையும் பயன் விளக்கப்பட்டதாயிற்று.

**3 மிக்க பிரமம் விறல்யோனி யென்றுரைக்கத்
தக்க தெனதசித்திற் சார்வுபெறத்—தொக்கவுயிர்
கெற்பத்தை யான்சேர்ப்பன் கேழ்கிளரும் பூதங்க
ளுற்பத்தி சேருமிதி லுற்று.**

**மிக்க பிரமம்**—பெரிதான ப்₃ரஹ்மம், **விறல் யோனி-**உலகனைத்துக்கும் காரணம், **என்று உரைக்கத்தக்கது** — என்று சொல்லத்தக்கதாய், **எனது அசித்தில்**—என்னுடையதான அசேதன மூலப்ரக்ருதியில், **சார்வுபெற**—பொருந்தியிருக்கும்படி, **தொக்க உயிர் கெற்பத்தை** — சேதன ஸமஷ்டி ரூபமான க₃ர்ப்ப₄த்தை, **யான்**—நான், **சேர்ப்பன்**— சேரச் செய்கிறேன்; **இதில் உற்று**—இந்தச் சேர்த்தியினால், **கேழ் கிளரும்**—பிரமன் முதல் புல ஈருகப் பலவகையாகப் படரும், **பூதங்கள் உற்பத்தி**—எல்லா ஜீவர்களின் பிறப்பும், **சேரும்**—உண்டாகிறது.

---

3. ஸத்வம் முதலான முக்கு₃ணங்கள் ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டிவைக்கும் முறையை ஐந்தாவது ஶ்லோகம் முதலாகக்கூறி, அத்₄யாயத்தின் இறுதியில் இந்த ப₃ந்த₄த்திலிருந்து விடுபடும் வழியைக் கூறுவதற்குமுன், "யாவத் ஸஞ்ஜாயதே கிஞ்சித்" [13-26] என்று 'எல்லா ஜீவராசிகளும் ப்ரக்ருதி புருஷர்களின் சேர்த்தியால் உண்டானவை' என்று சென்ற அத்தியாயத்தில் கூறப்பட்ட ப்ரக்ருதி புருஷஸம்யோக₃ம் ப₄க₃வானால் தன்னாலேயே செய்யப்பட்டது என்று இந்த ஶ்லோகத்திலும், அடுத்த ஶ்லோகத்திலும் கூறுகிறான். இதன்மூலம் மேலே சொல்லவிருக்கும் கு₃ணங்களைக்கொண்டு ஜீவனை ஸம்ஸாரத்தில் கட்டிவைப்பதும் தன்னால் செய்யப்படுவதே என்று உணர்த்துகிறான். (மம யோநிர் மஹத்₃ப்₃ரஹ்ம யத்) என்னுடையதாய், உலகனைத்துக்கும் காரணமாய், பெரியதாயிருப்பதாய், அதனாலேயே 'ப்₃ரஹ்ம' எனப்படுவதான மூலப்ரக்ருதி யாதொன்று உண்டோ. 'தஸ்மிந்' [அதில்] என்று மேலே வருவதால், அதற்கு ப்ரதிகோடியாக 'யத்' என்னும் பத₃ம் வருவித்துக்கொள்ளப்பட்டது. 'மம யோநி:' [எனக்குக் காரணமானது] என்று கூட்டிப்பொருள்கொண்டால், "அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜக₃த: ப்ரப₄வ: ப்ரளயஸ்ததா₂| மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சித₃ஸ்தி த₄நஞ்ஜய||" [7-6] [அர்ஜுநா!

மா ॥ कृत्स्नस्य जगतो योनिभूतं मम महद्ब्रह्म यत्, तस्मिन् गर्भं दधाम्यहम्; * भूमिरापोऽनलो वायुः खं मनो बुद्धिरेव च ।

---

நான் எல்லாவுலகிற்கும் உத்பத்திலய காரணமாயிருக்கிறேன்; என்னைக்காட்டிலும் மேலானது எதுவுமில்லை] என்று கீ₃தையில் சொல்லியிருப்பதோடு முரண்படும்; தனக்குக் காரணமானதில் தான் க₃ர்ப்ப₄த்தை அளிப்பதும் பொருந்தாது; அடுத்த ஶ்லோகத்தில் "தாஸாம் ப்₃ரஹ்ம மஹத்₃யோநி: அஹம் பீ₃ஜப்ரத₃: பிதா" [அந்தந்த உருவங்களுக்கு 'ப்₃ரஹ்ம' எனப்படும் மூலப்ரக்ருதி மேலான காரணமாயிருக்கிறது. நான் அதில் சேதன ஸமூஹமாகிற பீ₃ஜத்தை அளிக்கும் தந்தையாயிருக்கிறேன்.] என்று கூறியிருப்பதும் விரஸமாகிவிடும். ஆகையால் உலகிற்குப் பிதாவான தான் உலகமாகிற க₃ர்ப்ப₄த்தை அளிக்கத்தகுந்த விகாரமடையும் பொருள் ஒன்றே இங்கு 'யோநி' ஶப்₃த₃த்தால் குறிக்கப்படுவதாகக் கொள்ளவேண்டும். அது மஹான் அஹங்காரம் முதலாக உலகங்களீருகவுள்ள விகாரப்பொருள்கள் அனைத்துக்கும் காரணமான மூலப்ரக்ருதியே என்று கொள்வதே பொருத்தம். இவ்விடத்தில் பின்வருமாறு ஓராக்ஷேபம் எழுகிறது:— உலகிற்குக் காரணமான "பெரிய ப்₃ரஹ்மம்" எனத்தக்கவன் பரமாத்மாவேயொழிய மூலப்ரக்ருதி ஆகாதே; "வாஸுதே₃வ: பரா ப்ரக்ருதி:" [ஏகாயநஶாகை] [வாஸுதே₃வனே மேலான ஜக₃த்காரணம்] "யத்₃பூ₄தயோநிம்" [முண்ட₃ 1-1-6] [பூ₄தங்களனைத்துக்கும் காரணம் பரமாத்மாவே] "கர்த்தாரமீஶம் புருஷம் ப்₃ரஹ்மயோநிம்" [முண்ட₃ 3-1-8] [உலகைப்படைத்த நிமித்தகாரணனும், உபாத₃ான காரணமுமாய் 'ப்₃ரஹ்ம' எனப்படும் நியாமகனான பரமபுருஷனை] முதலானவிடங்களில் அவனேயன்றோ ஜக₃த்காரணனாக ஓதப்படுகிறான்; அப்படியிருக்க, "மம யோநி:" என்று அவனை ஜக₃த்காரணத்தைக் காட்டிலும் வேறாக இங்கு எப்படிப் படிக்கமுடியும்? மேலும் 'ப்₃ரஹ்ம' என்னும் சொல்லே ப்ரக்ருதியைச் சொல்லமாட்டாதது; அப்படியிருக்க, "மஹத் ப்₃ரஹ்ம" என்று ப்ரக்ருதியைக் கூறுவதாகச் சொல்லுவது சிறிதும் பொருந்ாதே; ஆகையால், "ப்₃ரஹ்மபுச்ச₂ம் ப்ரதிஷ்ட₂ா" [தைத் — ஆநந்தவல்லீ-5] முதலானவிடங்களிற்போலே ப்₃ரஹ்மஸ்வரூபமே இங்கும் "மம யோநி:" [என்னுடைய ஜக₃த்காரணமான ஸ்வரூபம்] என்று வேறுபட்டதுபோல ஔபசாரிகமாக

अहङ्कार इतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा ॥ अपरेयम् (७. ४) इति निर्दिष्ट
अचेतनप्रकृतिर्महदहङ्काराादिविकाराणां कारणतया महद्ब्रह्मेत्युच्यते ।
श्रुतावपि क्वचित्प्रकृतिरपि ब्रह्मेति निर्दिश्यते * यस्सर्वज्ञस्सर्वविद्यस्य ज्ञान

---

வழங்கப்படுகிறது என்றே கொள்ளவேண்டும்—என்பது அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாத4ானம் பின்வருமாறு;— முன் இரண்டு ஷட்கங்களில் சொல்லப்பட்ட அர்த்த2ங்களை விளக்குவதற்காகவே எழுந்தது இந்த மூன்றுவது ஷட்கம். அதில் "பூ4மிராபோSநலோ வாயு: க2ம் மநோ பு3த்3தி4ரேவ ச | அஹங்கார இதீயம் மே பி4ந்நா ப்ரக்ருதிரஷ்டத4ா || அபரேயம்" [கீ3தை 7—4] என்னுமிடத்தில் தனக்கு ஶேஷபூ4தமாகச் சொல்லப்பட்ட அசேதன மூலப்ரக்ருதியே இங்கு ப்ரக்ருதி ஶப்3த3த்தோடு ஒரே பொருளை உடைய 'யோநி' ஶப்3த3த்தால் சொல்லப்படுகிறது என்றும், அங்கு "இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்3தி4 மே பராம்| ஜீவபூ4தாம்" [கீ3தை 7-5] என்று அந்தத் தாழ்ந்த அசேதந ப்ரக்ருதியை த4ரிப்பதாகக் கூறப்பட்ட மேலான ப்ரக்ருதியான ஜீவஸமூஹமே இங்கு அசேதன ப்ரக்ருதியாகிற யோநியில் கர்மாநுப4வத்திற்காகச் சேர்க்கப்படும் க3ர்ப்ப4ம் என்று கூறப்படுகிறது என்றும் கொள்வதே பொருத்தமானது. "ஏதத்3யோநீநி" [கீ3தை 7-6] என்று அங்கும் ப்ரக்ருதியைக் குறித்து யோநிஶப்3த3ம் வழங்கப்பட்டதும் குறிக்கொள்ளத் தக்கது. அந்த மூலப்ரக்ருதி பெரிதான பஞ்சபூ4தங்களுக்கும், அவற்றுக்குக் காரணமான அஹங்காரத்திற்கும், அதற்குக் காரணமான 'மஹான்' என்னும் தத்துவத்திற்கும் காரணமாயிருந்துகொண்டு அந்தந்தக் கார்யப்பொருள்களைக் காட்டிலும் மிகப்பெரிதாயிருக்கையால் அதை "மஹத் ப்3ரஹ்ம" என்று குறிப்பதும் பொருத்தமே. ப்3ரஹ்ம ஶப்3த3மும் காரணத்வத்தையிட்டும், பெரிதாயிருப்பதையிட்டும் பரப்3ரஹ்மமல்லாத மூலப்ரக்ருதிவிஷயமாகவும் ஜீவவிஷயமாகவும் ஶாஸ்த்ரங்களில் வழங்கப்படுவதைக் காண்கிறோம். "யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித் யஸ்ய ஜ்ஞாநமயம் தப: | தஸ்மாதே3தத்3ப்3ரஹ்ம நாம ரூபமந்நம் ச ஜாயதே ||" [முண்ட3க 1-1-10] [எவனொருவன் எல்லாப் பொருள்களின் ஸ்வரூப ஸ்வபா4வங்களை அறிகிறானோ, (உலகைப் படைப்பதற்கு) ஞானமயமான ஸங்கல்பத்தை எவன் செய்கிறானோ,

मयं तपः । तस्मादेतद्ब्रह्म नाम रूपमन्नं च जायते ॥ (मु. १.१.१०) इति ; * इतस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम् । जीवभूताम् (७ ५) इति चेतन- पुञ्जरूपा या परा प्रकृतिर्निर्दिष्टा सेह सकलप्राणिबीजतया गर्भशब्देनोच्यते।

---

அவனிடமிருந்து, மஹதா3தி3களுக்குக் காரணமாகவும் பெரிதாகவு மிருக்கையாலே 'ப்3ரஹ்ம' எனப்படும் மூலப்ரக்ருதி நாமரூபங்களை யுடையதாய், பூ4மி முதலானவையாகப் பிறக்கிறது] என்னும் வேத3 வாக்யத்தில் மூலப்ரக்ருதி ப்3ரஹ்ம ஶப்3த3த்தால் குறிக்கப்படுவ தைக் காணலாம். இப்படி மூலப்ரக்ருதியை ஜக3த்காரணமாகக் கொள்வது, பரமாத்மாவை உலகிற்கு உபாதா3னகாரணமாகக் கொள்வதோடு ஒத்திருப்பதேயொழிய முரண்பட்டதல்ல; விகாரமற் றவனான பரமாத்மாவுக்கு மூலப்ரக்ருதியை ஶரீரமாகக் கொண்டிருக் கையையிட்டன்றோ ஜக3து3பாதா3நகாரணத்வம் ஒப்புக்கொள்ளப் படுகிறது. அதனாலன்றோ ஏழாம் அத்தியாயத்திலும் "ஏதத்3 யோநீநி பூ4தாநி" என்று சேதநாசேதனங்களை உபாதா3னமாகக் கூறி, உடனே "அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜக3த: ப்ரப4வ:ப்ரளயஸ் ததா2" [7—6] என்று தன்னையே உலகனைத்துக்கும் உத்பத்தி லயகாரணமான உபாதா3னமாகக் கூறிக்கொண்டான் கண்ணன். ஆகையால், முற்கூறிய ஆக்ஷேபம் பொருந்தாது. (தஸ்மிந் க3ர்ப்ப4ம் த3த4ாம்யஹம்) மூலப்ரக்ருதியாகிற அந்தத் தாழ்ந்த ப்ரக்ருதியில், "இதஸ் த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்3தி4 மே பராம் | ஜீவபூ4தாம்" [7-5] [இந்த அசேதன ப்ரக்ருதியைக் காட்டிலும் வேறுபட்டதாய், மேலான ப்ரக்ருதியான ஜீவ ஸமூ ஹத்தையும் என்னுடையதென்று அறிவாயாக] என்று கூறப்பட்ட மேலான ப்ரக்ருதியான ஜீவஸமூஹமாகிற க3ர்ப்ப4த்தை நான் த4ரிக்கச் செய்கிறேன். "மம யோநி:" என்று அசேதநப்ரக்ருதி நினைவுறுத்தப்படுகையால், அதில் சேர்க்கப்படும் 'க3ர்ப்ப4ம்' அதைக்காட்டிலும் மேலானதாக முன் [7-5-ல்] படிக்கப்பட்ட சேதனப்ரக்ருதியாகவே இருக்கவேண்டும்; இந்த ஶ்லோகத்தின் பிற்பாதியில் "எல்லா ஜீவராசிகளின் பிறப்பு இதனால் உண்டாகிறது" என்று கூறியிருப்பதும் இதை வலியுறுத்துகிறது; ஆகையால் 'க3ர்ப்ப4' ஶப்3த3ம் ஜாத்யேகவசநமாய், ஸகல ப்ராணிகளுக்கும் பீ3ஜமாய் (காரணமாய்) இருக்கையையிட்டு ஜீவஸமூஹத்தைக் குறிக்கிறது என்றே கொள்ள வேண்டும்;

६०. ततः समस्तदेवैश्च श्रीपतिस्तत्र चागतः ।
कारुण्यसिन्धुः श्रीरामः कोटिसूर्यसमप्रभः ॥

६१. आविर्बभूव सदसि राजानमवलोक्य तम् ।
कृपासुधादृष्टिभिश्च शिशिरीकृत्य सद्गतिः ॥

६२. उत्थाप्य संपरिष्वज्य प्राह वाक्यं कृपान्वितः ।
कल्याणगुणसंपन्न! वैष्णवोत्तम! भूपते! ॥

६३. मत्तोऽधिकान्महाभाग! मद्भक्तान्मन्यसे यथा ।
सन्तुष्टोऽहमनेनाद्य वृणीष्व वरमुत्तमम् ॥

६४. इति ब्रुवाणे श्रीरामे वाक्यमुत्तरमब्रवीत् ।
नृपतिः प्राञ्जलिर्भूत्वा विनयेन समन्वितः ॥

---

## குலசேகரரின் வரப்ப்ரார்த்த,னை

60-*67. அதற்குப்பின் லக்ஷ்மீநாதனை அரங்க நகரப்பன் கருணைக்கடலாய், கோடி ஸூர்யர்களின் ஒளி யுடையவனுயிருக்கும் ஸ்ரீ ராமனின் திருமேனியுடன் எல்லா தேவர்களோடு அங்கு எழுந்தருளி, ராஜஸபையில் தோன்றினன். அவ்வரசரைப்பார்த்து, நல்லோர்களுக்குத் தஞ்சமாயிருப்பவனுய், கருணையுடையவனை அப்பெரு மான் கருணையமுதக் கடாக்ஷங்களாலே அவரைக் குளிரச் செய்து, அவரை எழுப்பி ஆரத்தழுவி "கல்யாண கு₃ணங் களை உடையவரே! வைஷ்ணவர்களில் தலைசிறந்த அரசரே! மஹாபா₄க்₃யசாலியே! நீர் என்னைக்காட்டிலும் மேலானவர்களாக என் அடியார்களை நினைக்கிறபடியால், நான் மிகவும் உகந்திருக்கிறேன். இப்போதே என்னிட மிருந்து ஒரு சிறந்த வரத்தைப் பெற்றுக்கொள்வீர்" என்று அருளினன். இப்படி ஸ்ரீராமபிரான் அருளியவுடன், அவ்வரசர் அடக்கத்துடன் கைகூப்பி "அரசர் தலைவனை

६५. राम! राजेन्द्र! लोकाभिराम! राजीवलोचन! ।
योगीन्द्रचित्तकमलद्युमणे! कमलासख! ॥

६६. वृणीष्वेति वरं देव! ब्रवीषि करुणाकर! ।
किं प्रार्थयेऽहं देवेश! सर्वमेवाददाः पुरा ॥

६७. त्वद्भक्तेषु दृढां भक्तिं त्वयि चैव वृणोम्यहम् ।
एवमुक्ते नृपवरे सन्तुष्टहृदयो हरिः ॥

६८. वरं तथैव दत्वाथ पुनः प्रोवाच विस्मितः ।
नीलांशजातां त्वत्पुत्रीं देहि मे नरनायक! ॥

६९. भवामि तेऽहं जामाता श्वशुरस्त्वं मतो मम ।
तच्छ्रुत्वा रङ्गनाथस्य वाक्यं नृपशिखामणिः ॥

---

ராமபிரானே! உலகை அழகால் வசப்படுத்துகிறவனே! தாமரைக் கண்ணனே! யோகியர் தலைவர்களின் இதயக் கமலங்களை மலரவைக்கும் ஸூர்யனே! கமலையின் துணைவனான தேவனே! கருணைக்கடலே! 'வரம் வேண்டிக்கொள்' என்று கூறுகிறாய். தேவர்தலைவனே! நீ எனக்கு வேண்டியது அனைத்தையும் ஏற்கனவே கொடுத்திருக்கிறாய்; (ஆகையால்) உன்னிடம் நான் எதைப் பிரார்த்திப்பேன்? உன் அடியார்களிடமும் உன்னிடமும் உறுதியான பக்தியையே நான் வரமாக வேண்டுகிறேன்'' என்று பதிலுரைத்தார்.

## சேரகுலவல்லீபரிணயம்

67*-*74. அவர் அவ்வண்ணம் உரைத்தவுடன் அரசர் தலைவரான அவரிடம் உகந்த நெஞ்சினனான எம்பெருமான் அவ்வண்ணமே வரமளித்து, வியப்புற்றவனாய் அவரைப் பார்த்து, ''அரசரே! நீளாதேவியின் அம்சமாய்ப் பிறந்திருக்கும் உமது பெண்ணை எனக்குக் கன்னிகாதானம் செய்து கொடுப்பீர்! உமக்கு நான் மாப்பிள்ளையாகிறேன்.

७०. धन्योऽस्म्यहं कुलं जन्म पवित्रं च मम प्रभो! ।
इत्युक्त्वा स्वपुरीं रम्यां कृत्वालङ्कारसंयुताम् ॥

७१. भूषणैर्भूषयित्वाथ कन्यां परमशोभनाम् ।
वेदिं कृत्वा सभामध्ये हुत्वाग्निं स यथाविधि ॥

७२. श्रीरङ्गपुङ्गनाथाय देवेशेन्द्रमुखामरैः ।
सेविताय ददौ राजा कन्यां तां विधिपूर्वकम् ॥

७३. सोऽपि प्रगृह्य तां कन्यां राजपुत्रीं मनोहराम् ।
राज्ञा संपूजितः सर्वैरनर्घैः वस्तुभिः शुभैः ॥

७४. देवैस्सह पुनः प्राप स्वधाम परमं हरिः ।
ततो नृपस्य सचिवाः विस्मयाविष्टचेतसः ॥

---

உம்மை எனது மாமனாராக வரிக்கிறேன்'' என்று மறுபடியும் அருளினன். அரசர்தலைவரான குலசேகரர் அரங்கநகரப்பனுடைய அந்த வார்த்தையைக் கேட்டு, "ஐயனே! நான் பேறுபெற்றேன். எனது குலமும் பிறவியும் பரிசுத்தமாயிற்று'' என்று கூறி, அழகிய தன் நகரை மேலும் அலங்கரித்து, மிக அழகியவளான தன் பெண்ணைத் திருவாப₄ரணங்களால் அலங்கரித்து, ஸபையின் நடுவிலேயே மணமேடையை அமைத்து, முறைப்படி அக்₃னியில் ஹோமம் செய்து, தே₃வர்தலைவர்களான இந்திரன் முதலானவர்களால் ஸேவிக்கப்பெற்ற ஸ்ரீரங்க₃நாத₂னுக்குத் தன்பெண்ணை முறைப்படி கன்யகாதா₃னம் செய்தார். அப்பெருமானும் அழகிய ராஜகுமாரியான அப்பெண்ணை ஏற்றுக்கொண்டு விலைமதிப்பற்ற எல்லாவித₄மான மங்க₃ளப் பொருள்களாலும் அரசராலே ஆராதி₄க்கப்பெற்றவனாய், தேவர்களோடுகூட, தனது மேலான இருப்பிடத்தை அடைந்தான்.

७५. प्रभावं तस्य विज्ञाय गृहीत्वा भूषणान्यपि ।
निक्षिप्य पुरतस्तस्य भूषणानि भयान्विताः ॥

७६. राजानं प्रणिपत्याथ स्वापराधं निवेद्य च ।
ययाचिरेऽभयं तेभ्यः स राजाप्यभयं ददौ ॥

७७. ततः स्वपुत्रमनघं गुणवन्तं महाबलम् ।
राज्येऽभिषिच्य सततं तस्थौ वैष्णवसेवया ॥

७८. ततो नराधिपः श्रीमान् रामायणपरायणः ।
तास्ता रामकथाः शृण्वन् परमानन्दनिर्भरः ॥

७९. ततः कदाचिच्छ्रीरामनवम्यां सुमहोत्सवः ।
बभूव रामचन्द्रस्य सर्वलोकमहोत्सवः ॥

---

## குமாரனுக்குப் பட்டாபி₄ஷேகம்

74*-78. அதற்குப்பின் அவ்வரசரின் மந்திரிகள் வியப்புற்ற நெஞ்சினராய் அவருடைய பெருமையை அறிந்து, (மறைத்து வைத்திருந்த அவரது) ஆப₄ரணங்களை எடுத்து அவற்றை அவருக்கு முன்வைத்து ப₄யத்துடன் அரசரை வணங்கித் தம் பிழையை விண்ணப்பித்துத் தமக்கு அப₄யமளிக்கும்படி வேண்டினர். அவ்வரசரும் அவர்களுக்கு அப₄யமளித்தார். அதற்குப்பின் குற்றமற்றவனாய், கு₃ணங்களையுடையவனாய் பெரும்ப₃லமுடையவனான தன் பிள்ளையை அரசனாகப் பட்டாபி₄ஷேகம் செய்வித்து, தாம் வைஷ்ணவர்களுக்கு எப்போதும் கைங்கர்யம் செய்வதில் ஈடுபட்டார். அதற்குப்பிறகு, கைங்கர்யச் செல்வம் மிக்க அவ்வரசர் தலைவர் ஸ்ரீ ராமாயணத்திலேயே ஈடுபட்டவராய், ராமனின் அந்தந்தக் கதைகளைக் கேட்டுக்கொண்டு பேரானந்தத்தில் ஆழ்ந்தவராயிருந்தார்,

८०. बभूवालङ्कृतस्सम्यक् ताम्रचूडपुरं महत् ।
रम्भास्तम्भैः पताकाभिः शोभमानैश्च तोरणैः ॥

८१. भेरीकाहलनादैश्च वेदघोषैश्च पूरितम् ।
कुलशेखरदेवस्य रामभक्तस्य भूपतेः ॥

८२. गृहोत्तमे मणिमये विचित्रे देवतागृहे ।
विशेषतो महानासीत् रामचन्द्रमहोत्सवः ॥

८३. तस्यार्चाविग्रहस्यापि सीतारामस्य भक्तितः ।
राजगोपालदेवस्य मज्जनावसरे तदा ॥

८४. विमुच्य भूषणान्याशु चानर्घाण्यखिलानि च ।
तान्यर्चका यथामात्रं क्वचिद्देशे ह्यथिष्ठिपन् ॥

---

## ஸ்ரீ ராமநவமி மஹோத்ஸவத்தில் ஹாரத் திருட்டு

79—92. அதற்குப்பின், ஒரு ஸ்ரீராமநவமி தினத்தன்று ஸ்ரீ ராமபிரானுக்கு அனைத்துலகும் கொண்டாடும் பெரு விழாவான பெரிய மஹோத்ஸவம் நேர்ந்தது. மிகப் பெரிய தான கோழிக்கோடு நகரம் வாழைமரங்களாலும், கொடிக ளாலும், அழகிய தோரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்று, பே₄ரி. காஹளம் முதலான வாத்₃யமுழக்கங்களாலும், வேதவொலியாலும் நிறைந்திருந்தது; ராமப₄க்தரான குலசேகர ராஜாவின் ரத்னமயமான அரண்மனையில் உள்ள ஆச்சர்யமான கோயிலில் ராமசந்திரனுக்கு மிகப் பெரிய அவதார மஹோத்ஸவம் சிறப்பாக நடைபெற்றது, அதுசமயம் அந்த ஸீதாராமனுடைய அர்ச்சைத் திருமே னிக்கும், ராஜகோபாலப் பெருமாளுடைய அர்ச்சைத் திரு மேனிக்கும் பக்தியோடு திருமஞ்சனம் நடக்கும்போது, அர்ச்ச கர்கள் விலைமதிப்பற்ற எல்லாத் திருவாப₄ரணங்களையும் திருமேனியிலிருந்து விரைவாகக் களைந்து ஓரிடத்தில்

८५. अभिषेकं तदा चक्रुः हरये परमात्मने।
तदा पुरुषसूक्तैश्च श्रीसूक्तैर्वेदपारगाः॥

८६. भूसूक्तैरनुवाकैश्च वैष्णवैश्च महारवैः।
नृत्तगीतादिवाद्यैश्च महाभेरीरवैस्तथा॥

८७. बद्धाञ्जलिर्महाराजस्तं मज्जनमहोत्सवम्।
सेवमानस्तदा तस्थौ तदेकहृदयो महान्॥

८८. तदेकहृदयास्सर्वे पश्यन्तस्तं महोत्सवम्।
आस्थितास्तस्य ये चान्ये वैष्णवास्तत्र सादरं॥

८९. तदन्तरं समावेद्य मन्त्रिणः सहसा तदा।
अनर्घं मौक्तिकं हारं तत्रैकमपहृत्य ते॥

---

வைத்திருந்தனர். அப்போதே பரமாத்மாவான எம்பெருமா னுக்கு வேதம் வல்லவர்கள், பெருமுழக்கமுடைய புருஷ ஸூக்த ஸ்ரீ ஸூக்த பூஸூக்த விஷ்ணு ஸூக்த மந்திரங்க ளோடும். நாட்டியம், பாட்டு, வாத்தியங்கள் முதலானவற் ருேடும், மஹாபேரீ முழக்கங்களோடும் திருமஞ்சனம் நடத்தினர்கள். மஹாபுருஷராய், மஹாராஜாவான குல சேகரரும், அதிலேயே நெஞ்சு செலுத்திக் கைகூப்பி நின்று அந்தத் திருமஞ்சன மஹோத்ஸவத்தை ஸேவித் துக்கொண்டிருந்தார். அங்கிருந்த நாட்டுமக்களும், நகர மக்களுமான விஷ்ணுபக்தர்கள அனைவரும் அன்போடு அதிலேயே நெஞ்சு செலுத்தி அவ்வுத்ஸவத்தை அங்கு கண்டு களித்திருந்தனர், அந்த ஸமயத்தை அறிந்து, நிபுணர்களான மந்திரிகள் வைஷ்ணவர்களிடம் துவேஷம் காரணமாக, எவருமறியாமலிருக்கும்போது அங்கிருந்த விலைமதிப்பற்ற ஹாரத்தைச் சடக்கெனக் களவாடி வேறி டத்தில் மறைத்துவைத்து, முன்போலவே அரசரின் அருகில்

९०. केनाप्यलक्षितास्तत्र वैष्णवद्वेषकारणात् ।
निक्षिप्यान्यस्थले हारं निगूढं निपुणाश्च तम् ॥

९१. पूर्ववद्राजनिकटे मन्त्रिणः समुपस्थिताः ।
ततोऽलङ्कारसमये देवस्य परमात्मनः ॥

९२. नालक्ष्यत तदा हारो विम्युस्ते वैष्णवास्ततः ।
आचख्युरर्चकास्सर्वे तद्भूषाहरणं तदा ॥

९३. हारस्य तस्य राहित्यात्कुपितः कुलशेखरः ।
विलोक्य मन्त्रिणस्सर्वानब्रवीत्पृथिवीश्वरः ॥

९४. आख्यात हारहर्तारं शीघ्रं सम्यक् विचार्य च ।
अद्यैव सत्वरं चोरमानयध्वं ममान्तिकम् ॥

९५. प्रतिगृह्य वचस्तस्य राज्ञस्ते मन्त्रिणस्तदा ।
विचार्य तत्र सर्वत्र तं चोरं नृपशासनात् ॥

---

னின்றிருந்தனர். அதற்குப்பின எம்பெருமான்களை அலங்கரிக்கும்போது பரமபுருஷனின் ஹாரத்தைக் காணவில்லை. அதனால் அங்கிருந்த வைஷ்ணவர்களான அர்ச்சகர்கள் அனைவரும்பயந்தனர்; அதுபற்றி அப்போதே (அரசரிடம்) அறிவித்தனர்.

## அரசரின் கோபமும், மந்திரிகளின் குற்றச்சாட்டும்

93-*101. அந்தஹாரம் காணாமற் போனதுகுறித்துக் கோபங்கொண்ட சக்ரவர்த்தியான குலசேகரர் எல்லா மந்திரிகளையும் பார்த்து, 'ஹாரத்தைத் திருடியவன் யாரென்று விரைவில் நன்கு விசாரித்துச் சொல்லுங்கள். இன்றே திருடனை எனக்கருகில் கொண்டுவாருங்கள்" என்று கட்டளையிட்டார். அப்போதே அவ்வரசருடைய வார்த்தைகளை ஏற்று, வைஷ்ணவ த்வேஷிகளான மந்திரிகள் அரசரின் ஆணைப்படி ஹாரத்தைத் திருடியவனைப்பற்றி

९६. नृपान्तिकमुपागम्य ते तमूचुर्गुरुद्रुहः ।
अस्माभिरधुना सम्यक् यत्नेन महता नृप! ॥

९७. विचार्यमाणे चौर्येऽस्मिन्न चोरोऽन्येषु लक्षितः ।
उद्देश्या भवतोऽत्यन्तं वैष्णवाश्चान्तरङ्गिणः ॥

९८. तैरेवापहृतो हारो नृप! नास्त्यत्र संशयः ।
भगवद्द्रव्यहरणे कः समर्थो विना हि तान् ॥

९९. सञ्चरन्त्यखिला एते सम्पत्पुत्रा इवानिशम् ।
अनिवारितपन्थानः सर्वत्रात्रैव वैष्णवाः ॥

१००. कोशस्थाने च शुद्धान्ते मन्त्रास्थाने महीपते! ।
तेषां निवारणे राज्ञः कोपोऽभूदिति ते महान् ॥

---

எங்கும் விசாரித்துவிட்டு. அரசரிடம் வந்து "அரசரே! பெருமுயற்சியோடு இப்போது நாங்கள் திருடனைத் தேடிய வளவிலும் (வைஷ்ணவர்களைத் தவிர) வேறு எங்கும் திருடன் காணப்படவில்லை அரசரே! தேவரீருக்கு நெருங்கியவர்களாய், மிகவும் வேண்டியவர்களாயிருப்பவர்கள் வைஷ்ணவர்களே. அவர்களே ஹாரத்தைத் திருடியுள்ளனர். இதில் ஐயமில்லை. எம்பெருமானுடைய திருவாபரணத்தைத் திருட அவர்களைத்தவிர வேறு யாரால் முடியும்? இந்த வைஷ்ணவர்கள் அனைவரும் இரவும் பகலும் செல்வப் பிள்ளைகளைப்போலே எவராலும் தடுக்கப்படாமல் இங்குள்ள பொக்கிஷ அறையிலும், அந்தப்புரத்திலும், மந்திராலோசனையறையிலும் ஸஞ்சாரம் செய்துகொண்டு இருக்கிறார்கள். அரசரே! அவர்களைத் தடுத்தால் அரசரான தேவரீருக்குப் பெருங்கோபம் வந்துவிடுகிறது என்னும் காரணத்தால் அவர்களைக் கண்டவுடன் வணங்கி நாங்கள் அனைவரும் பேசாமலிருந்து விடுகிறோம்" என்று கூறினர்.

முருகனைப் பற்றியதான எட்டாம் பரிபாடலில் ஆசிரியர் நல்லந்துவனும் "அவிழ்துழாய் மலர்தரு செல்வத்துப் புள்மிசைக் கொடியோனும், புங்கவம் ஊர்வோனும், மலர்மிசை முதல்வனும்" என்று மும்மூர்த்திகளையும் குறிக்கும்போது மலர்ந்த துழாய் மாலையையும், உந்தித்தாமரை மலரில் தோன்றிய ஸகலலோகங்களாகிற செல்வத்தையும், உயர்ந்த கருடக்கொடியையும் உடையவன் என்று திருமாலைச் சிறப்பிக்கையாலும், 'மலர் மிசை முதல்வன்' என்று பிரமனைத் திருமாலின் உந்தித்தாமரையில் முதலில் பிறந்தவன் என்று குறிக்கையாலும், சிவனை 'புங்கவம் ஊர்வோன்' என்று வாகனத்தையிட்டும், அடுத்து 'ஆதிரை முதல்வன்' என்று நட்சத்திரத்தையிட்டுமே குறிக்கையாலும் திருமாலே மற்ற இரு மூர்த்திகளுக்கும் காரணமான கடவுள் என்று உணர்த்தினர். பரிபாடல் திரட்டில் எட்டாம் பாடலில் "மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்பூ" என்றும், "பூவினுள் பிறந்தோன் நாவினுள் பிறந்த நான்மறைக் கேள்வி' என்றும் மாயோனாகிற திருமாலின் உந்தியிலேயே உலகனைத்துக்கும் ஆதாரமான தாமரை மலர்ந்தது என்றும், பிரமனும் அப்பூவினுள் பிறந்தவனே என்றும் கூறுகையால், திருமாலே முழுமுதல்வன் என்று விளங்குகிறது, பத்துப்பாட்டிலுள்ள பெரும்பாணாற்றுப் படையிலும் 402-வது அடி தொடங்கி "நீல் நிற உருவின் நெடியோன் கொப்பூழ் நான்முக ஒருவற் பயந்த பல் இதழ்த் தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றி" என்று நீல நிறத்து நெடியவனாகிற திருமாலது உந்தித்தாமரையிலிருந்தே நான்முகன் படைக்கப்பட்டான் என்னும் இவ்விஷயம் வலியுறுத்தப்பட்டது,

இப்பாடலில் சொன்னபடி பரமன் எல்லாவிடத்திலுமிருக்கிறானால் எல்லாப் பொருள்களாலும் இவன் சுமைபோல் சுமக்கப்படுகிறானோ? என்னும் ஐயம் விளையும்; பரமன் அனைத்தையும் தாங்குகிறானால் சுமைபோல் அவற்றைச் சுமக்கிறானோ? என்னும் ஐயம் விளையும். ஞான ஸ்வரூபனாகையாலே இவ்விரு ஐயங்களுக்கும் இடமில்லாமலே எல்லாப் பொருள்களையும் வியாபித்து அவற்றைத் தாங்குகிறான் என்னும் விஷயத்தை கீதை (9—4,5) ச்லோகத்தில் சொன்னது போலவே "உறைவும் உறைவதும் இலையே, உண்மையும் மறவியில் சிறப்பின் மாயமார் அனையை" என்னும் அடிகளில் மூன்றும் பரிபாடல் காட்டியதும் இங்கு குறிக்கொள்ளத் தக்கது.

6. நாகமேந்து மேருவெற்பை நாகமேந்து மண்ணினை
நாகமேந்து மாகமாக மாகமேந்து வார்புனல்
மாகமேந்து மங்குல்தீயோர் வாயுவைந் தமைந்துகாத்து
ஏகமேந்தி நின்றநீர்மை நின்கணே யியன்றதே.

பதவுரை:— **நாகம் ஏந்தும் ஆக**-திருவநந்தாழ்வானாலே த4ரிக்கப்பட்ட திருமேனியை உடையவனே! **நாகம்**- ஸ்வர்க்கத்தை, **ஏந்து** -த4ரிக்கிற, **மேரு**—மேருவென்கிற, **வெற்பை**-பர்வதத்தையும். **நாகம்** — தி3க்3க3ஜங்களாலே, **ஏந்து**—த4ரிக்கப்பட்ட, (அன்றிக்கே) **நாகம்** — திருவநந்தாழ்வானாலே, **ஏந்து**—த4ரிக்கப்பட்ட, **மண்ணினை** — பூமியையும், **மாக**—பரமபத3மென்ன. **மாகம்**—ஆகாஶத்தாலே, **ஏந்து**—த4ரிக்கப்பட்ட, **வார்**—ப்ரவாஹஸ்வருபமான, **புனல்**—கங்கையென்ன இவற்றையும், **மாகம்**—ஆகாஶத்தாலே, **ஏந்து**—த4ரிக்கப்பட்ட, **மங்குல்**—மேக4த்தையும், **ஓர்தீ**—வைஶ்வாநராக்3நியையும், **வாயுவைந்து** — பஞ்ச வ்ருத்தி ப்ராணன்களையும், **அமைந்து** — ரக்ஷண த4ர்மத்திலே பொருந்தி, **காத்து**—ரக்ஷித்து, **ஏகம்**—ஒருவனாகவே, **ஏந்தி**—த4ரித்து, **நின்ற**—நிற்கிற, **நீர்மை**—தன்மை, **நின்கணே** — உன்பக்கலிலேயே. **இயன்றதே**—உள்ளது.

அவ:— **ஆரும்பாட்டு ஸகலாந்தர்யாமித்வத்தால் வந்த ஸகலாத4ரத்வம் சொல்லிற்றாய் நின்றது கீழ். 'லோகத்திலே ஒன்றுக்கொன்று தா4ரகமாயும் தா4ர்யமாயும் போருகிற**

---

6. *அவ:*—சென்ற பாட்டில் 'எம்பெருமான் அனைத்துக்கும் அந்தர்யாமியாகையாலே அனைத்தையும் த4ரித்து நிற்பவன்' என்று சொல்லப்பட்டது. "உலகத்தில் ஒரு பொருள் மற்றொரு பொருளை த4ரிப்பதாகவும், ஒன்று மற்றொன்றால் த4ரிக்கப்படுவதாகவும் காணப்படுகிறதே; அப்படியிருக்க அனைத்தையும் த4ரிப்பவன் நான் என்று எப்படிச் சொல்லுவது?" என்று எம்பெருமான் திருவுள்ளமாக "அந்தந்தப் பொருள்களையும் த4ரித்து நிற்பவர் தேவரீரே என்று வேதா3ந்தங்களிலேயே ப்ரஸித்3த4மான இந்த அர்த்த2ம் தேவரீர் ஒருவரிடமே நிலைநிற்பதன்றோ; இப்படி நீர் அனைத்தையும் த4ரித்து நிற்பதையும் தமது முயற்சியாலே எவராலும் காண முடியாது" என்கிறார் இப்பாட்டில்,

தில்லையோ' என்று ப₄க₃வத₃பி₄ப்ராயமாக, அந்தப் உ பத₃ார்த்த₂ங்களுக்கும் தேவரீரே த₄ாரகரென்று வேதா₃ந்த ப்ரஸித்₃த₄மான இவ்வர்த்த₂ம் தேவரீர் பக்கலில் வ்யவஸ்தி₂த மன்றோ? இஸ்ஸர்வாத₄ாரத்வமும் ஸ்வஸாமர்த்₂யத்தாலே வேறொருவர்க்கும் காணமுடியாதென்கிறார்.

வ்யா:— (நாகமேந்து மேருவெற்பை) ஸ்வர்க்க₃த்தை த₄ரிக்கிற மேருவாகிற பர்வதத்தை. மேருவுக்கு ஸ்வர்க்க₃ாத₄ாரத்வம் மேருஶிக₂ரத்தில் தேஜோத்₃வாரத்தாலே. (நாகமேந்து மண்ணினை) தி₃க்₃க₃ஜங்களாலே த₄ரிக்கப்படுகிற பூ₄மியென்னுதல், பாதாளக₃தனாயிருந்துள்ள திருவநந்தாழ்வானாலே த₄ரிக்கப்படுகிற பூ₄மியென்னுதல், (நாகமேந்து மாகம்) து₃:க்க₂க₃ந்த₄ரஹிதமான ஸுக₂த்தாலே பூர்ண

---

வ்யா:—(நாகமேந்து மேருவெற்பை) ஸ்வர்க்க₃த்தை த₄ரிக்கிற மேரு எனப்படும் மலையை. '*ஸுவர்க்கே₃ வை லோகோ நாக:*' என்னும் வேதவாக்கியத்தின்படி நாக ஶப்₃த₃ம் ஸ்வர்க்க₃ லோகத்தைக் குறிக்கிறது. மேரு மலை தனது *ஶிக₂*ரத்திலுள்ள ஒரு தேஜஸ்ஸாலே (ஒளிக்கற்றையாலே) ஸ்வர்க்க₃த்தை த₄ரித்து நிற்கும் என்று *ஶா*ஸ்த்ரங்கள் கூறுகின்றன. (நாகமேந்து மண்ணினை)' நாக₃:' என்னும் பத₃ம் ஆதி₃ஶேஷனாகிற பாம்பையும், யானையையும் குறிக்கும். பூ₄மியை ஆதி₃ஶேஷனும் எட்டு தி₃க்₃க₃ஜங்களும் தாங்குவ தாகப் புராணங்கள் கூறும். ஆகையால் தி₃க்₃க₃ஜங்களாலே தாங்கப்படும் பூ₄மி என்றும், (பாதாளத்தில் இருக்கிற) ஆதி₃ஶேஷனாலே த₄ரிக்கப்படுகிற பூ₄மி என்றும் இரண்டுவிதமாகப் பொருள்கொள்ளலாம். (நாகமேந்துமாகப்) துன்பத்தின் வாஸனையும் அற்றதாய் இன்பம் நிறைந்திருக்கும் பரமாகாஶமெனப்படும் பரமபத₃ம். (மாகம்) இவ்வுலகத் துன்பங்களற்று இன்பமயமாயிருக்கையாலே பரமாகாஶமெனத்தக்க சுவர்க்கம். (அன்றிக்கே) மற்ற நாலு பூ₄தங்களைக் காட்டிலும் பெரிதாயிருக்கையாலே 'மஹாக₃ம்' [பெரியதான ஆகாயம்] எனத்தக்க ஆகாயத்தைக் கூறுகிறதாகவுமாம். (மாகமேந்துவார்புனல்)

---

அரு—ஆறும்பாட்டு உ (பத₃ார்த்த₂ங்களுக்கும்) ஒன்றுக்கொன்று த₄ாரகமான எல்லாப் பத₃ார்த்த₂ங்களுக்கும் ஸர்வேஶ்வரனே த₄ாரகனென்றபடி.

மான பரம வ்யோமம். ''ஏந்தல் என்று-தேங்கலாய், ஆநந்த₃ நிர்ப்ப₄ரமான தே₃ஶமென்கை. ''நாகம்' என்று – து₃:க்க₃ க₃ந்த₄ரஹிதமான ஸுக₂த்துக்கு வாசகமானபடி எங்ஙனேயென்னில், கம்-ஸுக₂ம். அகம்-து₃:க்க₂ம் நாகம்-து₃:க்க₂ ரஹிதமித்யர்த்த₂:. ''நாகமேந்தும் ஆக'' என்று-ஸம்பு₃த்₃தி₄யாய் திருவநந்தாழ்வானாலே த₄ரிக்கப்பட்ட திரு

---

அந்த ஆகாயத்தாலே த₄ரிக்கப்படுகிறதாய், வெள்ளமிடும் ஆகாஶக₃ங்கை. ''மஹாக₃ம்' என்பதின் தமிழ் வடிவமான மாகம் இங்கு மும்முறை படிக்கப்படும்போது முதலில் பரம பத₃த்தையும், அடுத்து சுவர்க்கத்தையும், அடுத்து பூ₄தா காசத்தையும் குறிப்பதாகவோ, பின்னிரண்டு மாகங்களும் ஆகாயத்தையே குறிப்பதாகவோ கொள்ளப்படுகிறது. 'மாகம்' என்னும் முதல் பத₃த்திற்கு 'நாகம் ஏந்து' என்ற விஶேஷணமிட்டிருப்பதற்குக் கருத்து என்ன? எனில்: 'துன்பம் சிறிதுமற்ற இன்பத்தால் நிறைந்த' என்பதே அவ் விஶேஷணத்துக்குப் பொருளாகும். எப்படி? எனில்: 'கம்' என்பது வடமொழியில் ஸுக₂த்தைக் குறிக்கும்; 'அகம்' என்று அதற்கு நேர் எதிர்த்தட்டான துன்பத்தைக்குறிக்கும்; மறு படியும் இல்லாமையைக் காட்டும் ஒரு நஞ்ஞைச்சேர்த்து 'நாகம்' என்றது 'துன்பம் சிறிது மற்ற இன்பம்' என்று பொருள் படுகிறது. 'ஏந்து' என்றது தேங்கியிருப்பதைக் குறிக்கிற தாகையாலே, 'நாகமேந்துமாகம்' என்றது இன்பம் நிறைந்திருப்பதாய் ''*பரமே வ்யோமந்*'' [தைத்திரீயம்] என்று உபநிஷத்துக்களில் குறிக்கப்படும் பரமாகாஶமான பரமபத₃த்தைச் சொல்லுகிறது, அன்றிக்கே ''நாகமேந்துமாக!' என்று விளிச்சொல்லாய் ''திருவனந்தாழ்வானலே த₄ரிக்கப்பட்ட திருமேனியையுடையவனே!'' என்றும் பொருள்கொள்ளலாம். இப்போது மேலேயுள்ள 'மாகம்' பரமபத₃த்தைக் குறிக்கிறது. அடுத்துள்ள 'மாகம்' ஆகாயத்தைக் குறிக்கிறது. (மாகமாக மேந்துவார்புனல்) பரமபதமென்ன, ஆகாயத்தாலே த₄ரிக்கப் பட்டுப்பெருகும் க₃ங்கை₃யென்ன இவையும். கீழே சுவர்க்கம், பூ₄மி, எம்பெருமானுடைய திருமேனி, ஆகியவை ஒவ்வொன்றால் த₄ரிக்கப்படுவதாகக் கூறியதுபோலும், மேலே ஆகாஶ கங்கையையும் மேகத்தையும் ஒவ்வொன்றால் த₄ரிக்கப்படுவதாகக் கூறியதுபோலும் இடையிலிருக்கும் 'மாகம்' எனப் படும் பரமபத₃த்தை மற்றொன்றால் த₄ரிக்கப்படுவதாகக்

மேனியை உடையவனே! b இந்தால்-கீழ்ச்சொன்ன த₄ாரக பதா₃ர்த்த₂ங்களும் ப₄க₃வத₃ாஹிதஶக்திகமாய்க்கொண்டு த₄ரிக்கின்றனவென்றதாய்த்து. (மாகமாகமேந்துவார்புனல்) பரமபத₃மென்ன ஆகாஶத்தாலே த₄ரிக்கப்படுகிற ப்ரவாஹ ரூபமான க₃ங்கை₃யென்ன, இவையும்,

(மாகமேந்துமங்குல்) ஆகாஶம் த₄ரிக்கிற மேக₄த்தையும். (தீயோர் வாயுவைந் தமைந்து காத்து) c வைஶ்வா நராக்₃நியையும், பஞ்சவ்ருத்தி ப்ராணன்களையும் ரக்ஷண

---

க்ஷமையாலே மேலும் கீழும் ஒவ்வொன்றை த₄ரிப்பவையாகக் கூறப்பட்ட பொருள்களும் எம்பெருமானாலே அளிக்கப்பட்ட ஶக்தியைக்கொண்டே ஒவ்வொன்றை த₄ரிக்கின்றன என்று உணர்த்தப்படுகிறது.

(மாகமேந்துமங்குல்) ஆகாயத்தால் த₄ரிக்கப்படும் மேக₄த்தையும், (தீயோர்வாயுவைந்தமைந்துகாத்து) 'ஓர்' என்பதை மத்₄யமணி ந்யாயத்தாலே முன்னும் பின்னும் கூட்டிப் பொருள் கொள்ளலாம். ஒப்பற்றதான வைஶ்வாநராக்₃னியையும் ப்ராணன், அபானன், உதானன், வ்யானன், ஸமானன் என்று ஐந்தாகப் பிரிந்திருக்கும் 'பஞ்சவ்ருத்திப்ராணன்' எனப்படும் வாயுவையும், காக்குமியல்விலே பொருந்திநின்று ரக்ஷித்து.

"அஹம் வைஶ்வாநரோ பூ₄த்வா ப்ராணிநாம் தே₃ஹமாஶ்ரித: ।
ப்ராணாபாநஸமாயுக்த: பசாம்யந்நம் சதுர்வித₄ம் ॥"

[கீ₃தை 15-14]

[நானே வைஶ்வாநரன் எனப்படும் ஜாட₂ராக்₃னியாகி எல்லா ஜீவர்களின் ஶரீரத்திலும் இருப்பவனாய், ப்ராணன், அபானன் முதலான வாயுக்களோடு கூடியவனாய், அவர்கள் உண்ணும் நாலுவகைப்பட்ட உணவைச் சமைக்கிறேன்] என்று கீ₃தையில்

---

b (இத்தால்) என்றது—பரமவ்யோமத்துக்கு அவன்தானே த₄ாரகனென்னுமிடம் தோற்ற வேறோர் த₄ாரகமாக இட்டுச் சொல்லாதே, கேவலம் "மாகம்" என்றத்தால், கீழ் த₄ாரகங்களாகச் சொன்ன மேருவும் ஶேஷனும் ஈஶ்வரனாலே கொடுக்கப்பட்ட ஶக்தியை உடையதாய்க்கொண்டு த₄ரிக்கின்றனவென்றபடி. c (அக்₃நி) ஜாட₂ராக்₃னி.

த4ர்மத்திலே சமைந்து நின்று ரக்ஷித்து "ஓர் வாயுவைந்து மைந்து காற்று" என்று பாட2மானபோது - த3ஶத4ாவிப4க்த மான வாயுவைச் சொல்லுகிறது. 29. मेघोदयस्सागरसन्नि-वृत्तिः" (மேகோ4த3யஸ் ஸாக3ரஸந்நிவ்ருத்தி:) இத்யாதி3களிற் சொல்லுகிறபடியே நிராலம்ப3நமான ஆகாஶத்திலே ஸஞ்ச ரிக்கிற ஸகலபதா3ர்த்த2மும் ஈ ஶ் வ ர ஸங்கல்பத்தாலே ஸஞ்சரிக்கிறதென்று சொல்லிற்றுய்த்து. d 29. ' यथाकाश-

கூறியபடியே உணவைச் சமைப்பதன் மூலம் தே3ஹத்தை த4ரிக்கச்செய்யும் ஜாட2ராக்3னியையும் பஞ்சவ்ருத்தி ப்ராணன் களையும் காக்குமியல்வினனுன இவனே அவற்றுக்கு அந்தர் யாமியாயிருந்து ரக்ஷிக்கிருன் என்று கருத்து, "ஓர்வாயு வைந்துமைந்து காற்று" என்று பாட2மானபோது 'வாயு வைந்து' என்று பஞ்சவ்ருத்தி ப்ராணன்களும், 'ஐந்து காற்று' என்று "*நாகஶ்ச கூர்ம; க்ருகர: தே3வத3த்த: த4நஞ்ஜய;*" [(1) நாகன், (2) கூர்மன், (3) க்ருகரன், (4) தே3வத3த்தன், (5) த4நஞ்ஜயன் என்று காற்றுகள் ஐந்து வகைப்படும்] என்று ஐந்துவகையான காற்றுக்களுமாகப் பத்து வகையாகப் பிரிந் திருக்கும் காற்றைச் சொல்லுகிறது என்று கொள்ளவேண்டும்.

29. மேகோ4த3யஸ் ஸாக3ரஸந்நிவ்ருத்திர்
வித்3யுத்3விப4ங்க3: ஸ்பு2ரிதாநி வாயோ: |
இந்தோ3ர் விபா4கோ3 க3தமுஷ்ணரஶ்மேர்
விஷ்ணோர் விசித்ரா: ப்ரப4வந்தி மாயா: ||

[மேகம் தோன்றுவது, ஸமுத்ரம் அலைபொங்கித் திரும்புவது, மின்னல் தோன்றி மறைவது, காற்று அசைவது, சந்திரனின் வ்ருத்3தி4க்ஷயப் பிரிவுகள், ஸூர்யன் செல்வது ஆகிய இவை யெல்லாம் விஷ்ணுவின் விசித்திரமான மாயைகள்] முதலான ப்ரமாணங்களில் சொல்லுகிறபடியே, "ஒன்றுக்கும் ஆதா4ரமா யிராத ஆகாஶத்திலே ஸஞ்சரிக்கிறஎல்லாப் பொருள்களும் எம்பெருமானுடைய ஸங்கல்பத்தாலேயே அப்படித் திரிகின் றன" என்பது இப்பாட்டின் திரண்டபொருள்.

d யோக3ஶாஸ்த்ரத்திலே அவனதீ4நமென்றதுக்கு ப்ர மாணமருளிச்செய்கிறுர் (யதா2காஶேத்யாதி3)

ஸ்தி²தோ நித்ய'' (யதா₂காஶஸ்தி₂தோ நித்யம்) இத்யாதி₃,(ஏக மேந்தி நின்றநீர்மை) ஒருவஸ்துவே த₄ரிக்கிறதென்று ஶ்ருதிசொல்லுகிற ஸ்வப₄ாவம். (நின்கணேயியன்றதே) தேவரீர் பக்கலிலே வர்த்திக்கிறது. இயற்றல் - நடத்தலும் வளர்த்தலும், ''யாவர் காணவல்லர்'' என்றுகீழோடே அந்வயம். இஸ்ஸர்வாத₄ரத்வத்தை தேவரீர் காட்ட நான் கண்டாற்போலே வேறு காணவல்லாரார்? என்கிறார். 6.

---

29* யதா₂காஶஸ்தி₂தோ நித்யம் வாயுஸ்
ஸர்வத்ரகோ₃ மஹாந்
ததா₂ ஸர்வாணி பூ₄தாநி மத்ஸ்தா₂நீத்யுபதா₄ரய ||
[கீ₃தை 9-6]

[பெரிதான வாயு (எதற்கும் ஆத₄ாரமாயிராத) ஆகாஶத்தில் எப்படி எங்கும் பரவிநிற்கிறதோ, அப்படியே எல்லாப்பொருள்களும் என்னிடம் நிற்கின்றனவென்று அறிவாயாக] என்று கீ₃தையிலும் சொல்லப்பட்டதன்றோ. (ஏகமேந்தி நின்ற நீர்மை)

''தா₄தா விதா₄தா நாராயண:'' [ஸுபா₃ால]

அனைத்தையும் படைப்பவனும் த₄ரிப்பவனும் நாராயணனே]

''ஸ தா₃தா₄ர ப்ருதி₂வீம் த்₃யாம் உதேமாம்'' [தை-ஆர]

[அப்பரமாத்மா ஒருவனே இக்தக் கீழ்மேலுலகங்களனைத்தையும் த₄ரிக்கிறான்.]

'' ஏக ஏவ ஸ இதம் பி₃ப₄ர்த்தி விஶ்வம் ''

[அவனொருவனே இவ்வுலகனைத்தையும் த₄ரிக்கிறான்]

'' விஶ்வம் பி₄ப₄ர்த்தி பு₄வநஸ்ய நாபி₄:'' [தை-நா]

[உலகமாகிற சக்கரத்திற்கு நாபி₄ (குடம்) போலிருந்துகொண்டு அனைத்தையும் த₄ரிக்கிறான்] முதலானவிடங்களில் ஒரு பொருளே உலகனைத்தையும் த₄ரிக்கிறது என்று ஶ்ருதி சொல்லுகிற பெருமை. (நின்கணே இயன்றதே) தேவரீர் ஒருவரிடமே உள்ளது. 'இயற்றல்' - 'நடத்தல், வளர்த்தல்' என்று இருபொருள்படும். இங்கு நடத்தலை, அதாவது பொருந்தி நிற்பதைக் கூறுகிறது. 'யாவர்காண வல்லர்'' என்று மூன்றும் பாட்டிலுள்ளதை இங்கும் சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டும், இப்படி நீர் ஒருவரே அனைத்துக்கும் ஆத₄ாரமாயிருக்கும் இப்பெருமையை தேவரீர்காட்ட நான் கண்டாற்போலே வேறொருவரால் காண முடியுமோ? என்கிறார். 6.

**7. ஒன்றிரண்டு மூர்த்தியாய் உறக்கமோ டுணர்ச்சியாய்**
**ஒன்றிரண்டு காலமாகி வேலைஞால மாயினும்**
**ஒன்றிரண்டு தீயுமாகி ஆயனாய மாயனே**
**ஒன்றிரண்டு கண்ணினானு முன்னையேத்த வல்லனே.**

பதவுரை:— **ஒன்று** - முக்கியமான விஷ்ணுமூர்த்தியும், **இரண்டு மூர்த்தியாய்** — அப்ரதா₄நர்களான ப்₃ராஹ்மா ₃ த₄ ராத்மகமான இரண்டு மூர்த்தியும் ஆகி, **உறக்கமோடு**—அஜ்ஞானமாகிற நித்திரைக்கும். **உணர்ச்சியாய்** - ஜ்ஞானமாகிற விழிப்புக்கும் நிர்வாஹகனாய், **ஒன்றிரண்டு காலமாகி**—ஸத்வ ரஜஸ் தமோகு₃ணங்கள் நிறைந்து நிற்கும் மூவகைக் காலத்துக்கும் நிர்வாஹகனாய், **வேலை**—ஸமுத்₃ரத்தினாலே சூழப்பட்ட, **ஞாலமாயினும்**—பூ₄மிக்கு நிர்வாஹகனாய், **ஒன்றிரண்டு தீயுமாகி**—ஆஹவநீய கா₃ர்ஹபத்ய த₃க்ஷிணாக்₃நிகளுக்கு நிர்வாஹகனாய், **ஆயனாய**—ஆயர் குலத்தில் அவதரித்த, **மாயனே**—ஆஶ்சர்யபூ₄தனே! **ஒன்றிரண்டு கண்ணினானும்** — ஞானமளிப்பவனான முக்கண்ணனும், **உன்னை**—உன்னை, **ஏத்த**—ஸ்தோத்ரம் பண்ண, **வல்லனே**—ஸமர்த்த₂னே?

அவ:— ஏழாம்பாட்டு. "நாம் ஜ்ஞானத்துக்கு விஷயமான பின்பு பரிச்சே₂தி₃த்து அறியமாட்டாதொழிகிறது ஜ்ஞான ஶக்திகளுக்குக் குறையன்றோ? 'யாவர் காண வல்லரே' என்கிறதென்?" என்ன, தேவரீர் இதரஸஜாதீயராய் அவதரித்து ரக்ஷிக்கிறபடியை ஜ்ஞானத்தாலும் ஶக்தியாலும் அதி₄கனாக ப்ரஸித்₃த₄னான ருத்₃ரனும் அறியமாட்டானென்கிறார்.

---

## சங்கநூல் ஒற்றுமை - 6.

"அனைத்தையும் வியாபித்து நிற்பதால் அனைத்துக்கும் ஆதா₄ரமாயிருப்பவன் திருமாலே" என்று சென்ற பாட்டில் கூறியதையே இப்பாட்டில் விவரிக்கிறதாகையாலே, சென்றபாட்டின் சங்கநூல் ஒற்றுமையில் ஸர்வவ்யாபகத்வத்தால் ஏற்படும் ஸர்வாதா₄ரத்வத்தைத் திருமாலுக்கு முழங்கும் சங்கநூற்பகுதிகள் இங்கும் மேற்கோளாகக் காட்டத்தக்கவை.

७१. निःशेषेण विनाशस्तत्कर्मणोरिति चेन्न तत् ।
फलदानायाप्रवृत्ते कर्मणी एव नश्यतः ॥
७२. न कर्म तत्प्रवृत्तं तु "तस्य ताव"दिति श्रुतौ ।
शरीरमोक्षपर्यन्तविलम्बश्रवणात्तथा ॥

---

70* - *71. **பூர்வபக்ஷம் — "ஸர்வே பாப்மாந: ப்ரதூ₃யந்தே"** [சா₂ந் 5-2-43] [எல்லாப் பாபங்களும் அழிகின்றன] என்று ப்₃ரஹ்ம வித்₃யையின் ப₂லமாக இன்ன பாபங்கள் அழிகின்றன என்று குறிப்பிட்டுச் சொல்லாமல் எல்லாப் புண்ய பாபங்களுமே அழிவதாகக் கூறுகையால் 'எல்லாக் கர்மங்களும் அழிகின்றன' என்றே கொள்ள வேண்டும். "ப்₃ரஹ்ம வித்₃யை நிறைவடைந்த பின்பும் ஶரீரம் இருக்கையால், அதற்குக் காரணமான சில புண்ய பாபங்கள் எஞ்சி நிற்க வேண்டுமே" எனில்: வேக₃மாகச் சுழலும் குயவனின் சக்கரம், சுழற்றியதை நிறுத்திய பின்பும் வேக₃த்தாலே சிறிது நேரம் சுழல்வதுபோலே, ஶரீரமும் பூர்வ ஸம்ஸ்காரத்தாலே சிறிது காலம் கர்மமில்லாமலே நிற்பதாகக் கொள்ளலாம். ஆகையால் எல்லாக் கர்மங்களும் அழிகின்றன என்றே கொள்ளவேண்டும்.

*71 - 73. **ஸித்₃தா₄ந்தம்** — இப்பூர்வபக்ஷம் தவறு. ப்₃ரஹ்மவித்₃யை உண்டாவதற்குமுன் விளைந்த புண்ய பாபங்களில் ப₂லம் கொடுக்கத் தொடங்காத புண்யபாபங்களே அழிகின்றன. ப₂லம் கொடுக்கத் தொடங்கிய ப்ராரப்₃த₄கர்மம் அழிவதில்லை. **"தஸ்ய தாவதே₃வ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத₂ ஸம்பத்ஸ்யே"** [சா₂ந் 6-14-2] [உபாஸகனுக்கு ப்ராரப்₃த₄கர்மம் முடியும் ஶரீரத்தின் இறுதிவரையிலேயே ப்₃ரஹ்மப்ராப்திக்குக் காலதாமதம் ஏற்படுகிறது. அதற்குப் பிறகு ப்₃ரஹ்மப்ராப்தி உண்டாகிறது] என்னும் வேத₃வாக்யம் 'ப்ராரப்₃த₄கர்மம் முழுவதும்

७३. सर्वकर्मविनाशे च शरीरस्थित्यसंभवात् ।
अतो विनाशोऽप्रवृत्तफलपुण्याघयोर्भवेत् ॥
॥ इत्यनारब्धकार्याधिकरणम् ॥

॥ अग्निहोत्राद्यधिकरणम् ॥ (४-१-१०)

सि-सू अग्निहोत्रादि तु तत्कार्यायैव तद्दर्शनात् ॥ (४-१-१६)

கழியும் ஶரீரம் நீங்கும்வரையில் உபாஸகனுக்கு ப்₃ரஹ்ம ப்ராப்தி உண்டாகாது' என்று கூறுகிறதன்றே. புண்ய பாபங்களாலுண்டான எம்பெருமானின் ப்ரீதிகோடங்களைத் தவிர ஶரீரம் நிலைத்து நிற்பதற்குக் காரணமான ஸம்ஸ்காரம் ஒன்று பூர்வபக்ஷத்தில் சொல்லியதுபோல் இருக்கிறதென்று காட்டப் பிரமாணம் எதுவுமில்லை. ஆகையால், எல்லாக் கர்மங்களும் அழிந்துவிட்டன என்று கொண்டால் ப்₃ரஹ்மவித்₃யை நிறைவடைந்ததற்குப்பின் உபாஸகனின் ஶரீரம் நிலைத்து நிற்பது பொருந்தாமற் போய்விடும். ஆகையால், ப₂லம் கொடுக்கத் தொடங்காத புண்ய பாபங்களே அழிகின்றன என்றும், ப₂லம் கொடுக்கத் தொடங்கிய ப்ராரப்₃த₄ கர்மங்களை உபாஸகனும் அனுப₄வித்தே கழிக்க வேண்டும் என்றும் தேறிற்று, [மரணமானுல் வைகுந்தம் பெறும் ப்ரபன்னனும் இந்த ஶரீரத்திற்குரிய ப்ராரப்₃த₄கர்மத்தை அனுப₄வித்தே தீரவேண்டும் என்றும், அவன் விஷயத்தில் மேல் ஶரீரங்களுக்குரிய ப்ராரப்₃த₄ கர்மங்களும் அழிகின்றன என்றும் அறியத்தக்கது.]

அநாரப்₃த₄ கார்யாதி₄கரணம் நிறைவுற்றது.

## அக்₃நிஹோத்ராத்₃யதி₄கரணம் ॥ 4-1-10 ॥

ஸி. ஸூ அக்₃நிஹோத்ராதி₃ து
தத்கார்யாயைவ தத்₃த₃ர்ஶநாத் ॥ 4-1-16 ॥

அக்₃நிஹோத்ராதி₃ து — அக்₃னிஹோத்ரம் முதலான ஆஶ்ரம த₄ர்மங்களோவெனில் (அவற்றின் ப₂லம் ஒட்டாமற்போவது கூடாதாகையால்) அனுஷ்டி₂க்கத்தக்க

௭௪. प्राग्विद्योत्तरपुण्यानामश्लेषः कथितस्ततः ।
पुण्यकर्मफलेच्छाया अभावे नित्यकर्मणाम् ॥

௭௫. अननुष्ठेयताशङ्का वार्यतेऽधिकृताविह ।
पुण्यत्वसाम्येनैवाग्निहोत्राद्याश्रमकर्मणाम् ॥

௭௬. कार्याश्लेषादकार्याणि तानीत्येतन्न युज्यते ।
अग्निहोत्रादिकर्मैतत् नित्यनैमित्तिकात्मकम् ॥

---

வையே; **தத்கார்யாயைவ**—ப்3ரஹ்மவித்3யையாகிற கார்யத்தின் பொருட்டேயன்றோ (அவற்றின் அனுஷ்டா2னம்); **தத்3த3ர்ஶநாத்**—அப்படி வேத3ம் ஓதுகையால்.

74-*75. **அவதாரிகை**—இதராதி4கரணத்தில் (4-1-8) ப்3ரஹ்ம வித்3யை உண்டானதற்குப்பின் விளைந்த புண்ய கர்மங்களும் ஒட்டாமல் போகின்றன என்று கூறப்பட்டது. அக்3னிஹோத்ரம் முதலான நித்ய நைமித்திக கர்மங்களினுல் ஏற்படும் புண்ய ப2லன்களில் விருப்பமில்லாவிடில் அவற்றை அனுஷ்டி2க்க வேண்டியதில்லையோ? என்னும் ஐயம் இவ்வதி4கரணத்தில் தவிர்க்கப்படுகிறது.

75*-*76. **பூர்வபக்ஷம்**—அக்3னிஹோத்ரம் முதலான நித்யநைமித்திக கர்மங்களும் புண்யங்களேயாகையால் இதராதி4கரணத்தின்படி அவற்றின் ப2லன்களும் ஒட்டாமற்போகின்றன; பயனற்ற கர்மங்களைச் செய்ய எவருக்கும் விருப்பமுண்டாகாது. ஆகையால் விருப்பமில்லாதவர்கள் அக்3னிஹோத்ரம் முதலான **ஆஶ்ரமகர்மங்களை** அனுஷ்டி2க்க வேண்டியதில்லை.

*76-79 **ஸித்3தா4ந்தம்**—இப்பூர்வபக்ஷம் தவறு, அக்3னிஹோத்ரம முதலான நித்யநைமித்திக கர்மங்களுக்கு மற்ற புண்யங்களைக் காட்டிலும் ஒரு **வாசி**யுண்டாகையால் அவற்றின் ப2லம் ஒட்டாமற்போவதில்லை ஆகையால் அவற்றை அனுஷ்டி2த்தே தீரவேண்டும். அவற்றுக்கு என்ன வாசி? எனில்: மற்ற புண்யங்களைப்போலல்லாமல், அக்3னிஹோத்ரம்

௭௭. विद्योत्पत्त्याख्यकार्यार्थमेवानुष्ठेयमन्वहम् ।
"तमेतं वेदे"ति तस्य तत्कार्यार्थत्वदर्शनात् ॥

௭௮. विद्योत्पत्तिर्न सिद्ध्येद्धि तत्त्यागे दूषितात्मनः ।
विद्या साऽऽवर्तनीया हि यावज्जीवं दिने दिने ॥

௭௯. अर्थोऽयं च "स खल्वेवं वर्तय"न्निति कथ्यते ।
अतो विद्योत्पत्तये वै कार्यमाश्रमकर्म तत् ॥

---

முதலானவை வித்3யை உண்டாவதாகிற கார்யத்தின் பொருட்டே தினந்தோறும் அனுஷ்டி2க்கவேண்டியவை. இது எந்த ப்ரமாணத்தால் ஸித்3தி4க்கிறது? எனில்: **''தமேதம் வேதா3நுவசநேந ப்3ராஹ்மணா விவிதி3ஷந்தி யஜ்ஞேந தா3நேந தபாஸாऽநாஶகேந'** [ப்3ருஹ 6-4-22] [வேதா3த்4யயனத்தாலும், யஜ்ஞத்தாலும், தா3னத்தாலும், ப2லனில் விருப்பமற்ற தவத்தினாலும் ப்3ரஹ்மஜ்ஞானிகள் அந்தப் பரமாத்மாவை உபாஸிக்க விரும்புகிறார்கள்] என்னும் வேத3வாக்யம் யஜ்ஞம் முதலானவற்றை வித்3யைக்கு அங்க3மாகச்சொல்லியிருக்கையாலே இது ஸித்3தி4க்கிறது. வித்3யையோ ஶரீரம் நீங்கும் வரையில் தினந்தோறும் அனுஷ்டி2க்கப்படவேண்டியது. இக்கர்மங்களை அனுஷ்டி2க்காவிட்டால் அதனாலுண்டாகும் பாபம் மனோநிலையைக் குலைத்து விடுமாகையால் உபாஸனம் பண்ணமுடியாமல் போய்விடும். ஆதலால் மனத்தின் ஶுத்3தி4 உண்டாவதற்காக அக்3னிஹோத்ரம் முதலானவற்றை ஶரீரம் முடியும்வரை தினந்தோறும் அனுஷ்டி2த்தேயாகவேண்டும். இவ்விஷயம் **''ஸ க2ல்வேவம் வர்த்தயந் யாவதா3யுஷம் ப்3ரஹ்மலோகமபி4ஸம்பத்3யதே''** [சா2ந்-8-15-1] [உபாஸகன் இவ்வண்ணமாக ஆயுள் முடியும்வரையில் கர்மங்களை அனுஷ்டி2த்து வருவதின் மூலம் ப்3ரஹ்மத்தை அடைகிறான்] என்று ஶ்ருதியிலும் ஓதப்பட்டுள்ளது. ஆகையால் ப்3ரஹ்ம வித்3யை உண்டாவதன் பொருட்டு அக்3னிஹோத்ரம் முதலான **ஆஶ்ரம கர்மங்களை** அனுஷ்டி2த்தேயாக வேண்டும் என்று தேறிற்று.

## ஷஷ்ட்யப்தபூர்த்தி வைபவம்

திருப்புல்லாணி S. T. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமிக்கு 30-6-88 அன்று உபயவேத பாராயணங்கள் தொடங்கப்பெற்று 1-7-88 அன்று ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவம் திவ்யதேச எம்பெருமான்கள் ப்ரஸாதத்துடன் இனிதே நடைபெற்றது. தம்பதிகள் பல்லாண்டுவாழப் பிரார்த்திக்கிறோம்.

## செய்திகள்

1 ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீமத்பரமஹம்ஸ வரதயதிராஜஜீயர் ஸ்வாமி ஸ்ரீவில்லிபுத்தூரில் ஜூலை 28-ந்தேதி சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் செய்துகொண்டு 1-10-88 வரை அங்கு எழுந்தருளியிருக்கிறார். அதுவரை ஸ்வாமியின் விலாஸம்:—"ஸ்ரீவரதயதிராஜஜீயர் ஸ்வாமி, C/o V. K. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, 19, தெற்கு மாடவீதி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

2 மதுரை ஐக்கிய வைஷ்ணவ ஸபையின் சார்பில் பெரியாழ்வார் திருநக்ஷத்திரத்தை முன்னிட்டு 22—6—88 முதல் 25—6—88 வரை பெரியாழ்வார் திருமொழி ஸேவை சாற்றுமுறையுடனும் ஸ்ரீமத் ரங்கம் ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியின் உபன்யாஸத்துடனும் விழா சிறப்பாக நடைபெற்றது. 27—6—88 நாதமுனிகள் அவதார விழாவை முன்னிட்டு ஷை ஸ்வாமி 'தமிழ்மறை தந்த வள்ளல்' என்ற தலைப்பில் உபந்யஸித்தார்.

3 திருவல்லிக்கேணி வானமாமலை மடத்தில் பிரதி சனி ஞாயிறுகளில் மாலையில் கீதாசார்யன் ஆசிரியர் Dr. M. A. வேங்கடகிருஷ்ணன் ஸ்வாமி "உபதேசரத்தினமாலை" காலக்ஷேபம் நிகழ்த்துகிறார். 23—7—38 சனியன்று மாலையில் ஸ்ரீ. உ. வே. வாக்அம்ருதவர்ஷீ வரதாசார்யஸ்வாமி தலைமையில், ஸ்ரீ உ. வே. சதாபிஷேகம் கோவிந்தநரஸிம்ஹாசார்ய ஸ்வாமியால் இக்காலக்ஷேபத் தொடர் தொடங்கி வைக்கப்பட்டது.

4 காட்டுமன்னார்கோயில் சன்னிதி முகப்புமண்டபத்தில் ஸ்ரீமந்நாதமுனிகள் ஸ்ரீ வைஷ்ணவ சமாஜத்தின் சார்பில் 24-7-88 ஞாயிறு 8-ம் ஆண்டு ஸ்ரீவைஷ்ணவ மகாநாடு திண்டுக்கல் தோப்புஸ்வாமி தலைமையில் நடைபெற்றது, பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர்.

Regd. No., M. 5103.

## அத்யாபகரின் பரமபதப்ராப்தி

சென்னை முத்தியால்பேட்டை ஸ்ரீ கிருஷ்ணன் கோவிலில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக அத்யாபக கைங்கர்யம் செய்து வந்தவரும், சென்னை K. A. தேவராஜன் ஸ்வாமி சித்தியாவுமான ஸ்ரீ உ. வே. சேஷாத்ரி அய்யங்கார் ஸ்வாமி 30-6-88 அன்று சென்னையில் ஆசார்யன் திருவடியடைந்நார். இந்த ஸ்வாமி காஞ்சி மஹாவித்வான் P. B. A. ஸ்வாமியின் திருவடிவாரத்தில் 40 ஆண்டுகள் காலக்ஷேபம் கேட்டவர். இந்த ஸ்வாமியின் இயல் கோஷ்டி 12-7-88 அன்று உபயவேத பாராயணங்களுடன் தேவராஜன் ஸ்வாமியால் நடத்தப்பெற்றது. ஸ்வாமிகள் பலர் எழுந்தருளி கோஷ்டியை அலங்கரித்தனர், பல திவ்ய தேசங்களிலிருந்து மாலை ப்ரஸாதங்கள் அநுக்ரஹிக்கப்பட்டன.

## மதுரையில் மஹா ஸுதர்ஶந ஹோமம்

மதுரை திருமாலடியார் குழாம் சார்பில் 3-6-88 முதல் 5-6-88 வரை ஆஞ்சநேயர் ஆலயத்தில் மஹா ஸுதர்சந ஹோமம் விசேஷமாக நடைபெற்றது. ஸ்ரீமத் பரமஹம்ஸ வரதயதிராஜ ஜீயர் ஸ்வாமி தலைமையில் ஸ்ரீ உ. வே. குமாரவாடி ராமாநுஜசார்ய ஸ்வாமி, தேரழுந்தூர் புலவர் ராமபத்ரன் ஸ்வாமி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீமத் ரங்கம் N. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, திருநகரி எம்பார் திருவேங்கடாசார்ய ஸ்வாமி, சித்ரகூடம் A. V. ரங்காசார்ய ஸ்வாமி முதலான பலர் உபந்யஸித்தனர். 'ஸ்ரீ ஸுதர்சந ஸ்தோத்ர மாலா' என்ற நூல் இலவச வெளியீடாக வெளியிடப்பட்டது.

---

*If un-delivered Please Return To :*

Sri S. Krishnaswamy Iyengar, M. A. B. L. Advocate,
*3-B, Puthur Agraharam, Tiruchi-620 017.*

To
Sri

The Honorary Secretary,
T. M. S. S. M. Library,
Tanjore.

POSTAGE PREPAID IN CASH

Edited, Printed & Published By S. Krishnaswamy Iyengar, M.A,B.L.,
At Srinivasam Press, Puthur Agraharam, Tiruchirapalli-620 017.